For Private Circulation only

# SELVI KANDARAJ EDUCATIONAL & CHARITABLE TRUST

Registration. No. 6611/2007




# 11ஆம் ஆண்டு சிறப்பு இதழ்

## News Letter 2019

**Registered Office**

Plot No.86, 'A' Block, Thanikachalam Nagar, 3rd Main Road,
1st Cross St., Ponniammanmedu, Chennai - 600 110. India.

**Administrative Office**
No.9A, 1st Cross Street, Sakthivel Nagar, Peravallur, Chennai-82.

Email : selvicharity@yahoo.com, Web Page: www.selvicharity.org
Facebook: www.facebook/selvicharity

Contact Mobile Nos. 9444004691 / 9840564778 / 9444102547

For Private Circulation only

Regn. No.6611/2007

9444004691
9840564778
9444102547

# SELVI KANDARAJ EDUCATIONAL & CHARITABLE TRUST

**Regd. Office :** Plot No.86, 'A' Block, Thanikachalam, Nagar 3rd Main Road, 1st Cross St., Ponniammanmedu, Chennai - 600 110. India.
**Administrative Office :** No.9A, 1st Cross Street, Sakthivel Nagar, Peravallur, Chennai-82. Email : selvicharity@yahoo.com, Web Page: www.selvicharity.org
Face book: www.facebook/selvicharity

**Advisors:**

Rtd.Judge. **K. Mohanachandran**
Shri. **S. Neelakantan**
Shri. **B. Panneerselvam**
Shri. **P. Munuswamy**
Shri. **P. Guruprasad**

**Patrons:**

Shri. **J.Venkatesan**
Chief Patron

Shri. **S. Natarajan**
Patron

**Trustees**

Shri.**K.Krishnakumar**
*Founder President*

Shri.**G.Sundar**
*Founder Secretary*

Shri.**V.Chandramohan**
*Founder*

Shri.**G.Krishnamurthy**
*Trustee-Treasurer*

Shri.**T.Ganapathy Subramanian**
*Trustee*

Shri. **M.Arunkumar**
*Trustee*

Shri. **A.Anandan**
*Trustee*

Shri.**K.Baskar**
*Trustee*


Shri. **N. Parthasarathi**
*Trustee*

Shri. **V. Stephen Raj**
*Trustee*

**PRO**

Ms.P.Renugadevi

# AMBITION



- "AMBITION IS THE FIRST STEP TO SUCCESS. THE SECOND STEP IS ACTION."
- "DON'T THINK ABOUT WHAT CAN HAPPEN IN A MONTH, DON'T THINK ABOUT WHAT CAN HAPPEN IN A YEAR. JUST FOCUS ON THE 24 HOURS IN FRONT OF YOU AND DO WHAT YOU CAN TO GET CLOSER TO WHERE YOU WANT TO BE!"

S. PRIYADHARSHINI, B.Com I
CHENNAI

S. Priyadharshini

**அன்பு மாணவ மலர்களே,**

**நிர்வாகக் குழு உறுப்பினர்களே,**

**நன்கொடையாளர்களே,**

**ஏனைய அனைத்து நண்பர்களே.**

இந்தக் கடிதம் மூலம் உங்கள் அனைவரையும் மற்றுமொரு முறை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நமது டிரஸ்ட்-ன் கடந்த பதினோரு (11) ஆண்டு தளர்ச்சி அடையா வளர்ச்சியின் மூலம் இதுவரை 2500-க்கு மேல் மாணவர்கள் பயனடைந்திருப்பதை நினைக்கும் போது

**“ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே அனைத்தையும் விட கோடி புண்ணியம்”** என்ற மகாகவி பாரதியின் வரிகளே நினைவிற்கு வருகிறது.

**“ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?“ என்று கேட்டபோது “ஓர் நூலகம் கட்டுவேன்”** என்று பதிலளித்தாராம் நம் மகாத்மா காந்தி.

அதுபோல என் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலையை நான் அடைந்தபோது, ‘‘என் சார்ந்த இந்த சமூகத்திற்கு என்ன செய்யலாம்?’’ என்று நான் நினைத்ததின் விளைவே நமது இந்த **டிரஸ்ட்.**

என்னைப் பொறுத்தவரை ‘‘Trust’’ என்றால் நம்பிக்கை,‘‘Trustees’’ என்றால் நம்பிக்கையானவர்கள். ஆகவே என் எண்ணத்தை செயலாக்க நான் நம்பிக்கை வைத்தவர்களே நமது ‘‘Trustee’’-க்கள்.

நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு வடதிசை காட்டும் ‘‘காம்பஸ்’’ போன்று நமது நீண்ட நெடிய, கரையே தெரியாத பயணத்தில், சரியான திசை காட்டி நம்மை, நமது குறிக்கோளை அடைய வழிகாட்டுபவர்கள் நமது ஆலோசகர்கள்.

‘‘சக்தியில்லையேல் சிவமில்லை’’ என்பார்கள். நம் ஆலோசகாகள் இல்லையென்றால் நாம் இல்லை.

இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களோடு என் பயணத்தை நான் தொடர நினைத்தபோது அது அனைத்தையும் நடைபெற வைத்தவர் நம் "Founder Secretary" திரு.ஜி.சுந்தர் அவர்கள்.

**இது தனிமனிதத் தவமில்லை,**

**ஓர் கூட்டு முயற்சி,**

**ஊர் சேர்ந்தாலே தேர் இழுக்க முடியும்.**

நமது இளைய சமுதாயத்தை ஊக்குவித்து, பயிற்றுவித்து, நல்வழிகாட்டுவதே நாம் செய்யும் தவமாகும்.

"புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே !" என்றார் லெனின். அந்த கூற்றின் உண்மையை உணர்ந்து மாணவர்களை அறிவாயுதத்தை ஏந்தச் செய்வதே நம் குறிக்கோள்.

"பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை" என்று கேட்டபோது "புத்தகங்கள்தான்" என்றாராம் மார்ட்டின் லூதர்கிங். ஆகவே இந்த சமுதாயத்தை நல்வழிப் படுத்திட நம் மாணவர்கள் கையில் எடுக்க வேண்டியது "புத்தகங்களே".

வாழ்க்கையில் முன்னேறத் தேவை லட்சியம்.

"ஒருமுறை வந்தால் கனவு:

இருமுறை வந்தால் ஆசை!

பலமுறை வந்தால் அதுவே லட்சியம்".......என்று சொன்னார் பாரத் ரத்னா அப்துல் கலாம்.

எனவே மாணவர்கள் தங்கள் லட்சியத்தை அடைய பலமுறை கனவு காணுங்கள்.

என் இனிய மாணவச் செல்வங்கள் நம் "Trust"-ன் மூலம் நற்பயன்பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

**K. Krishnakumar**
**Founder President**
**Selvi Kandaraj Educational & Charitable Trust**
**Chennai.**

**அனைத்து மாணவச் செல்வங்களே, ஏனைய நண்பர்களே.**

இந்த பதினோராம் ஆண்டு நினைவு இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் நமது டிரஸ்ட்-ன் நடவடிக்கைகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

1. கடந்த ஆண்டுதான் அதிகபட்சமான மாணவர்கள் நம் டிரஸ்ட் மூலம் உதவிப் பெற்றனர். சுமார் 373* மாணவர்கள் பயன் அடைந்தனர். கடந்த பதினோரு ஆண்டுகளில் மொத்தம் 2500* மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

2. இதில் சுமார் 25 மாணவர்கள் தனிப்பட்ட நன்கொடையாளர்கள் மூலம் உதவிப் பெற்று கொண்டிருப்பவர்கள் ஆவர்.

3. இவர்களில் சென்னையை சேர்ந்த ஒருவர்தான், Miss. P.Bhakiyalakshmi. நம் டிரஸ்ட் மூலம் தனிப்பட்ட நன்கொடையாளர் உதவியுடன் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து கல்வி உதவி பெற்று, தனது பொறியியல் படிப்பில் பட்டம் பெற்ற மாணவி நல்லதொரு வேலையில் சேர்ந்தது நம் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகிறது.

4. நம் டிரஸ்ட் ஆரம்பகால மாணவி நாகை மாவட்டம் தரங்கம்பாடியை சேர்ந்த, Miss.A. Saranya, தனது Ph.d படிப்பை முடிக்க இருப்பதும் இந்த ஆண்டுதான்.

5. நம் டிரஸ்ட் மாணவி நாகர்கோவில்-ஐ சேர்ந்த, Miss.A.N.Abisha தனது M.B.B.S படிப்பை முடிக்க இருப்பதும் இந்த ஆண்டுதான். ஓர் தனிப்பட்ட நன்கொடையாளர் மூலம் தனது டாக்டர் பட்டத்தை பெற இருக்கும் மாணவிக்கு எங்களது வாழ்த்துக்கள்.

6. சுமார் 60-70 சதவிகிதத்தில் மாணவர்கள் சேர்க்கையை Online-Computer மூலம் கல்வி உதவிகளை வழங்கும் நமது டிரஸ்ட், இந்த ஆண்டு Mobile App மூலம் மேற்கொண்டு 20 சதவிகிதம் கூடுதலாக, அதாவது 90 சதவிகித மாணவர்களை Online மூலம் சேர்க்க இருப்பதும் இந்த ஆண்டுதான்.

7. தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நம் டிரஸ்ட் தூண்களாக கருதப்படும் ஒருங்கிணைப்பாளர்களை, எங்களது தோளோடு தோளாக

எங்களுடன் வருபவர்களை வாழ்த்த வார்த்தைகள் இல்லை, வணகுகிறோம்.

மேலும் இந்த இதழில் நம் மாணவச் செல்வங்களின் பங்களிப்பைப் பார்க்கும்போது, புதிய பாரதத்தை உருவாக்கும் நம்பிக்கை என் உள்ளத்தில் தெரிகிறது. ஒளிமயமான எதிர்காலம் என் கண்களில் தெரிகிறது. சரியான விதையை, சரியான மண்ணில் போட்டு சரியான உரம் தெளித்து, களையெடுத்து, வேலி அமைத்து நீருற்றி வளர்த்தால் அந்த விதை நிச்சயம் நல்ல பலனைத்தான் கொடுக்கும். அந்த விதை மரமாக வளர்வது உறுதி. நமது டிரஸ்ட்-ன் குறிக்கோளும் அதுவே.

நன்கு படிக்கும் மாணவச் செல்வங்களில், ஏழ்மையானவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நன்கு படிப்பதற்கு தேவையான நிதி ஆதாரங்களையும், ஊக்கத்தையும் கொடுத்து இல்லாமையை நீக்கி அதனால் ஏற்படும் கல்லாமையை ஒழித்து ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதே நாம் எடுத்த சபதமாகும்.

இந்த சபதத்தை நாம் நிறைவேற்றும் தருணம் இதுவே. மாணவச் செல்வங்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி, நல்ல புத்தகங்களைப் படிப்பதன் மூலம் தங்கள் அறிவுத் திறனை வளர்க்க வேண்டும் என்பதே என் ஆசை.

**“ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள், அவனே எனது வழிகாட்டி”** என்றார் ஜுலியஸ் சீசர். புத்தகங்கள் வாசிப்பதன் பயனை இதனைவிட அருமையாக யார் சொல்வார்கள் ?.

ஆகவே மாணவ, மாணவியரை நன்கு படிக்க வைப்பதன் மூலம் உங்கள் அனைவருக்கும் ஒரு நல்ல நண்பனாய் விளங்கிட விரும்புகிறேன்.

நன்றி ! வணக்கம்.

**G. Sundar**
**Founder Secretary**
**Selvi Kandaraj Educational & Charitable Trust**
**Chennai-600 110.**

**நமது Trust-ன் அனைத்து அங்கத்தினர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் வணக்கம்.**

நமது இந்த புனிதப் பயணம் தொடர்கதையாக இல்லாமல், ஒரு காலகட்டத்தில் நல்ல முடிவை அடைந்து, அதாவது பொருள் இல்லை என்ற காரணத்தால் கல்வி கற்க இயலவில்லை என்ற நிலையை வேரறுத்து, நமது Trust-க்கு இனி வேலையில்லை என்ற நிலையை அடைய வேண்டும் என்பதே என் விருப்பம்.

மாணவச் செல்வங்களிடமிருந்து வீசும் அறிவு ஒளியினால், “ இல்லை” என்ற இரவு (இருள்) நீங்கி “இருக்கிறது” என்ற பகல் (ஒளி) வர வேண்டும்.

**“ஒரு கோவில் கட்டினால்” இந்து சந்தோஷப்படுவான்.**

**“ஒரு மசூதி கட்டினால்” முஸ்லிம் சந்தோஷப்படுவான்.**

**“ஒரு தேவாலயம் கட்டினால்” கிருஸ்துவன் சந்தோஷப்படுவான்.**

**ஆனால், “ஒரு பள்ளியைக் கட்டினால் கடவுளே சந்தோஷப்படுவார்”** என்றார் ஏழைப்பங்காளன், பெருந்தலைவர், கர்மவீரர் காமராஜர்.

இந்த மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி, கடவுளை சந்தோஷப்படுத்தும் விதமாக, தன் தாய் தந்தையரின் பெயரில்,“Selvi Kandaraj Educational & Charitable Trust” ஆரம்பித்து ஏழை மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களை வாழ்வில் கரைசேர முயற்சி செய்யும் நம் நிறுவனர் திரு.கே.கிருஷ்ணகுமார் போற்றுதற்குரியவர். “என்னிடம் இவ்வளவுதான் இருக்கிறது, இதற்குள் நடத்திக் கொள்” என்று கூறாமல் மாணவச் செல்வங்களின் தேவை என்ன என்று கேட்டு அதை அப்படியே நிவர்த்தி செய்யும் நம் நிறுவனர் திரு.கே.கிருஷ்ணகுமார்-ஐ எண்ணும்பொழுது நான் படித்த ஒரு நிகழ்வுதான் ஞாபகம் வருகிறது.

ஒரு முறை மறைந்த திரு. Henry Ford விடுமுறையை கழிக்க அயர்லாந்து சென்றபோது, ஒரு தொண்டு நிறுவன நிர்வாகி, அவரிடம் உதவிகேட்டு வந்தார். போர்டு (Ford) 2000 டாலருக்கு ஒரு காசோலையை கொடுத்தார். அடுத்த நாள் பத்திரிக்கைகளில் அவர் 20,000 டாலர் கொடுத்ததாக தவறுதலாக செய்தி வெளியானது. உடனே அந்த நிர்வாகி, Ford-ஐ சந்தித்து நடந்த தவறுக்கு

மன்னிப்பு கேட்டார். ஆனால் போர்டு (Ford) "அதனால் ஒன்றுமில்லை: இதோ மீதி 18,000 டாலருக்கான காசோலை" என்று மற்றொரு காசோலையை கொடுத்து தவறையே சரியாக்கினார்.

அதுபோல நமது டிரஸ்ட்-ன் வருடாந்திர செலவினங்களை கட்டுக்குள் வைக்க அறிவுறுத்தாமல், எங்கெல்லாம் வருவாய் தட்டுபாடு/குறைபாடு உள்ளதோ, அங்கெல்லாம் தன் சொந்த நிதியிலிருந்து கொடுத்து உதவும் இந்த மாபெரும் மனிதாபிமானச் செயல், நமது இளைய சமுதாயத்தின் மீது நிறுவனத் தலைவர்க்கு இருக்கும் அக்கறையைக் காட்டுகிறது.

நாட்டை வளப்படுத்துதலில் வற்றாத ஜீவநதிகளின் பங்கும் உண்டு, மற்றும் ஆறு, கால்வாய், ஓடை ஆகியவற்றின் பங்கும் உண்டு.

நமது இந்தத் தொண்டு ஒரு சிறிய ஓடையின் அளவே. ஆனால் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் செல்ல ஓடையால் மட்டுமே முடியும். ஓடை ஓடிக்கொண்டிருக்க நீர் எப்படி அவசியமோ அதுபோல் நமது டிரஸ்ட்-ன் பணிகளும் தடையில்லாமல் இருக்க நன்கொடைகளும், அதைத் தரும் நன்கொடையாளர்களும் அவசியம்.

இந்த அத்துனை நல்ல உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க நமது டிரஸ்ட்! வளர்க அதன் பணி!

**T. Ganapathy Subramanian**
**Assistant Secretary**
**Selvi Kandaraj Educational & Charitable Trust.**

# இணைய தொழில் நுட்பமும், நம் அறக்கட்டளையும்.

இந்த உலகத்தையே மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த கருவி கல்வி தான். அக்கல்விக்கு உதவி, மாணவமணிகளை சிறப்போடு வாழச் செய்யும் நமது "Selvi Kandaraj Educational & Charitable Trust" மேன்மேலும் பலரின் வாழ்வில் ஒளியேற்ற நாம் அனைவரும் கரம் கோர்த்து வான் உயர்த்துவோம்.

அன்றாடம் வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் மிக அத்தியாவசிய ஒன்றாக மாறிவிட்டது. எனவே நாமும் அதற்கேற்ப நம்மை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு நமது டிரஸ்டை சார்ந்த அனைவரும் பயன்பெரும் வகையில் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் டிரஸ்ட் உறுப்பினர்கள் அனைவரும் நமது இணையதள முகவரியான www.selvicharity.org மூலம் தகவல்கள் மற்றும் நிகழ்வுகளை தெரிந்துகொள்ளலாம். மேலும் வசதிக்கேற்ப "மொபைல் செயலியும்" (Mobile App) வடிவமைக்கபட்டுள்ளது. இந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை பற்றி இதோ சில வரிகள்.

"நமது இணையதளம்"

நமது டிரஸ்ட் மூலம் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகள், அதன் புகைப்படங்கள், மேலும் நமது டிரஸ்டின் உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர்களின் விவரங்கள் என அனைத்து தகவல்களும் நமது இணையதளம் (www.selvicharity.org) மூலம் தெரிந்து கொள்ளலாம். யாரேனும் நன்கொடை அளிக்க விரும்பினாலும் இணையத்தின் மூலமாகவே செய்ய முடியும். மேலும் மிக முக்கியமான பயன்பாடாக, நமது ஒருங்கிணைப்பாளர்கள் அவர்களது மாணவர்களின் மதிப்பெண் பட்டியல் மற்றும் விபரங்களை மிக எளிமையாக பதிவு செய்யும் வகையில் வடிவமைக்க பட்டுள்ளது.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட மாணவர்களை, நமது டிரஸட் உறுப்பினர்கள், மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்வார்கள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் உதவித்தொகை கல்விக்குப் பயன்படும் பொருட்களாக வழங்கப்படும். அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும் டிரஸட் உறுப்பினர்களுக்கும் Login ID மற்றும் Password வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். எனவே நமது இணையதளம், நம் நேரத்தையும், வேலை சுமையையும் குறைப்பதோடு, காலதாமதத்தையும்

தவிர்க்கிறது. ஆகவே நமது டிரஸ்ட்டை சார்ந்த அனைவரும் நம் இணையத்தளத்தை சிறப்பாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"மொபைல் செயலி" (Mobile App)

ஒருநாள் உணவின்றி கூட வாழ்ந்திட முடியும், ஆனால் ஒருநாள் மொபைல் இல்லாமல் வாழ்வது மிகவும் கடினம் என்ற சூழல் வந்துவிட்டது. நமது டிரஸ்ட் நிகழ்வுகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் நம் கைக்குள்ளே அடக்கும் வகையில் மொபைல் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலி முழுக்க முழுக்க ஒருங்கிணைப்பாளாகளின் மாணவர் பதிவுக்கு வசதியாக உருவாக்கப்பட்டது. நமது இணையதளம் மூலம் நாம் தெரிந்து கொள்ளும் அனைத்தையும் இந்த "மொபைல் செயலி" மூலம் தெரிந்துகொள்ளலாம். மாணவர்களின் பதிவுக்காக Computer-Browsing Centre தேடிச் செல்ல இனி தேவையில்லை. ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தங்கள் மொபைலில் நமது "மொபைல் செயலி – Mobile APP" யை பதிவிறக்கம் செய்து கொண்டு இதன் மூலமே பதிவு செய்திட மாணவர்களின் புகைப்படம் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் கொண்டு பதிவினை நிறைவு செய்ய முடியும்.

எனவே நமது டிரஸ்டின் "மொபைல் செயலி" மிகவும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம். நமது ஆண்டுவிழாவின் போது ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்பு பயிற்சியும், "மொபைல் செயலி"ன் பயன்பாடு மற்றும் அதன் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைக்கப்படும். இந்த "மொபைல் செயலி"-ஐ ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் Download செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். இதுவே நமது டிரஸ்டின் தொழில்நுட்ப பயன்பாடாகும்.

பிறந்தோம், இறந்தோம் என்றில்லாமல், "இறக்கப் பிறந்தோம், அதுவரை இரக்கத்தோடு உதவுவோம்" என்ற கொள்கையில் அடிஎடுத்து சென்றிருக்கும் நமது டிரஸ்டினை வாழ்த்தி வணங்குகிறேன்.

**M. Arunkumar**
**Assistant Treasurer**
**Selvi Kandaraj Educational & Charitable Trust**

# கல்வி

அறியா வயதிலே
அறிமுகப் படுத்தியது
என் ஒன்றாவது நட்பு..!
சிறு வயதிலே
கல்வி பெற எனக்கு
தடையாக இருந்தது
என் வீட்டினுடைய ஏழ்மை ...!
இந்த கல்வி அறிவை
தொடர்ந்து பெற எனக்கு
செல்வி கந்தராஜ் அறக்கட்டளை..!
கல்வி என்ற ஒன்றைக் கொடுங்கள்
கடந்து விடுவேன் காலங்கள் பல
வெற்று விடுவேன் சாதனைகள் பல...!

ரோஷிதா
9-ம் வகுப்பு கிறிஸ்து ராஜ் பள்ளி மார்தாண்டம்

## பலவீனமே பலம்

சிறுவன் ஒருவன் ஜூ டோ பயில விரும்பினான். அவனுக்கு ஒரு விபத்தில் இடது கை போய்விட்டது. இருந்தாலும் இந்தக் குறையை பொருட்படுத்தாமல் ஜூ டோ பயில பல ஆசிரியர்களிடம் அக்கலையை கற்றுத் தரும்படி கேட்டான். அதில் ஒரு ஆசிரியர் மட்டும் அவனுக்கு பயிற்சி அளிக்க ஒப்புக் கொண்டார்.

குரு அவனுக்கு தினமும் பயிற்சி அளித்தார். ஆனால் அவர் ஒரே ஒரு குத்து வித்தையை மட்டும் சொல்லிக் கொடுத்தார். நான்கைந்து மாதங்கள் சென்றன. அப்போதும் அதே பயிற்சி தான் அவர் அவனுக்கு அளித்தார். சிறுவனுக்கு ‘ஒரே ஒரு கையை மட்டும் தனக்கு கற்றுத் தருகின்றாரே ! ஏன்?’ என அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் தொடர்ந்து பயிற்சியை மேற்கொண்டான். ஒரு நாள் குருவிடம் நேரடியாகக் கேட்டே விட்டான்.

”குருவே” எனக்கு இந்த ஒரு குத்து போதுமா? என்று. அதற்கு குரு, ‘உனக்கு இந்த ஒரு குத்து போதும்” என்று சொல்லி விட்டார். நாட்களும் கடந்தன. ஒரு நாள் குரு அச்சிறுவனை போட்டிக்கு அனுப்பினார்.



ஒரு கையுடன் வந்த சிறுவனைப் பார்த்து பலரும் அற்பமாய் எண்ணினர். ஒரு கையுடைய சிறுவன் என்ன செய்துவிட போகிறான். ? என்று. ஆம் ! நீங்கள் நினைத்தது சரிதானே ! ஆனால் வெற்றி சிறுவனுக்கே அவனை விட பலசாலிகளை எல்லாம் ஆக்ரோஷமாய் எதிர் கொண்டு வீழ்த்தி விட்டான். எல்லோருக்கும் ஆச்சரியம் சிறுவனுக்கும்.

போட்டி முடிந்தவுடன் “எப்படி” குருவே என்னால் ஒரு கையை மட்டுமே வைத்துக் கொண்டு, ஒரே குத்துப் பயிற்சியை மட்டும் கற்று வெற்றி பெற முடிந்தது? என்று கேட்டான். குரு சொன்னார் ‘அதற்கு இரண்டே காரணங்கள் தான். ஒன்று நீ பயிற்சி செய்தது. ஜூ டோவிலேயே மிகவும் கடினமான குத்துக் கலை

இரண்டாவது, இந்தக் குத்தை தடுக்க வேண்டும் என்றால் குத்துபவனின் இடது கையை மடக்க வேண்டும் அது உன்னிடம் இல்லை.' ஒரே விஷயத்தில் கவனம் செலுத்தினால் அதில் வெற்றியை பெற முடியும்.

அதனால் தான் நான் உனக்கு ஒன்றை மட்டும் கற்றுத் தந்தேன்.

குருவுக்கு ஆத்மார்ந்த நன்றி சொன்னான் சிறுவன்.

மீ. சுபலஷ்மி
ஒன்பதாம் வகுப்பு
சென்னை-600019
ஒருங்கிணைப்பாளர்: R.பெத்தபெருமாள

## மேகம்

துள்ளி திரியும் மேகமே தூது சென்ற
மேகமே பதிலேதும் சொல்லாமல் எங்கு
சென்றாய் மேகமே ஒன்று கூடி
மழையாக வராமல் என்னிடம் சொல்லாமல்
என்னை இங்கு விட்டு விட்டு
ஏன் கலைகிறாய் மேகமே !

பரமேஸ்வரி
III
ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி
199 பேப்பர் மீல்ஸ் ரோடு,
பெரவள்ளூர்,சென்னை -11

## தமிழர்களின் வீர விளையாட்டு

## “சிலம்பம்”

**முன்னுரை:-**

“சிலம்பம்” என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். “சிலம்பம்” என்ற சொல் “சிலம்பல்” என்ற வினையின் அடியாகப் பிறந்தது. சிலம்பின் வரலாற்றையும்,சிலம்புக் கலையையும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**<u>சிலம்பின் வரலாறு:-</u>**

ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டது. அவற்றுள் மிகவும் பழைமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும், “சிலம்பம்” ஆகும்.

சிலம்பக் கலை பற்றிய அகழ்வாய்வுச் சான்றுகள் மிகத் தொன்மையானவை. கி.மு. 2000-க்கும் முற்பட்ட ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் 32 வகையான சிலம்ப அற்புதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற பல வனவிலங்குகளிடம் இருந்து காத்துக் கொள்ள கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும்.

**<u>சிலம்பம் ஒரு வீரவிளையாட்டு</u>**

இவ்விளையாட்டை ‘கம்பு சுற்றுதல்’ என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை / கால் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும்.

சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொள்ள குறைந்தது ஆறு மாத காலம் தேவை. சிலம்பாட்டம் ஆடுவதற்கு குறைந்தது இருவர் வேண்டும். ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் சிலம்பாட்டத்தைக் கற்று விளையாடி வருகின்றனர்.





**சிலம்பின் வகைகள்:**

- துடுக்காண்டம்
- குறவஞ்சி
- மறக்காணம்
- அலங்காரச் சிங்கம்
- போர்ச் சிலம்பம்
- பனையேறி மல்லு
- நாகநாளி
- நாகசீறல்

கள்ளன்கம்பு ஆகியனவாகும்.

**சிலம்பின் பழமையும்! பெருமையும்!**

இவை சென்னை அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் எகிப்திய போர் வீரர்கள் பயன்படுத்திய நான்கு அடி நீளமுள்ள கம்பும் வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மலை நிலக் (குறிஞ்சி) கடவுளான முரகனுக்கும் “சிலம்பன்” என்ற பெயர் உண்டு. சிலம்பம் சுமார் 500 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படுகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகத்திய முனிவர் 64 வகையில் ஒன்றாக சிலம்பத்தை குறிப்பிடுகிறார்.

மலைப் பகுதிகளில் அருவி விழும் ஓசை பறைகளின் கீச்சொலி மரங்களின் இலைகள் காற்றில் அசையும் ஓசை விலங்குகளின் இரைச்சல் போன்ற பல ஓசைகள் ஒலித்துக் கொண்டே இருப்பதால் மலைக்கு “சிலம்பம்” என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இக்கலை இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, பிரான்சு, கனடா போன்ற அயல் நாடுகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது.

**முடிவுரை**

சிலம்பம் என்பது தமிழர், தமிழர்கள், தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். தற்போது இது சில பள்ளிகளிலும், தனியாா அமைப்புகளாலும் கற்றுத் தரப்படுகின்றது. விளையாட்டுப் போட்டிகளில் வீர விளையாட்டாகவும் இடம் பெறுகிறது.


**பெயர் : வ. சுவேதா**

**வகுப்பு : 10-ஆம் வகுப்பு**

**இடம் : சென்னை-600019**

**ஒருங்கிணைப்பாளர் : R.பெத்தபெருமாள்**

## சிந்தனை துளிகள்

அழகான வீட்டிற்கு இணையான பள்ளிக்கூடம் இல்லை - காந்தியடிகள்

எந்த வேலையும் இழிவில்லை-சோம்பல்தான் இழிவு - மில்டன்

கல்வியை விட மிகப்பெரிய செல்வம் இல்லை அமைதிக்கு சமமான அகம் வேறு இல்லை -வால்மீகி

பேசுபருக்கும் கேட்பவருக்கும் ஒரே சமயத்தில் மகிழ்ச்சியைத் தருவது இனிய சொற்கள்தான்.

ஒரு கண நேரத்தின் கோபத்தை அடக்கி வைப்பவன் ஒரு நாள் துயரத்தை தவிர்த்தவனாவான்.

தன்னால் முடியாது என்ற நிலையிலும் எழுந்து செயல்படுபவனே வெற்றி வீரன் -ஜாக் டெம்ஸி

தேசம் ஒன்றே தேசியம் ஒன்றே ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் - பாரதியார்

**B.தருண்ராஜ்**

**VIII-A**

**சிறுமலர் மெட்ரிக் பள்ளி**

**4-ரோடு, சேலம்-7**



## <u>யார் இவர் ? கவிதை</u>

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும்
உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழந்தவர் !
விடுதலைப் போராட்ட வீரர், தொண்டுள்ளம் படைத்தவர்!
தேசியத்தை வளர்த்தவர் ! விடுதலை உணர்வை ஊட்டியவர்!
ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தவர்!
பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்தவர்!
எட்டயபுரம் அரசவைக் கவிஞராய் விளங்கியவர்!
மதுரை பள்ளியில் தமிழாசிரியராய் பணிபுரிந்தவர்!
பெண் அடிமைத்தனம் நீங்க எண்ணியவர்!
நாடு விடுதலை பெற போராடியவர்!
யார் இவர்? யார் இவர்?

**இவர் தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

**V. ஜெயந்தி**

**ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி**
**199 பேப்பர் மீல்ஸ் ரோடு,**
**பெரவள்ளூர்,சென்னை -11**

## திருக்குறள்

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு : 1812

திருக்குறளின் முதன் பெயர் : முப்பால்

திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் : 133

திருக்குறள் அறத்துபாலில் உள்ள குறட்பாக்கள் : 380

திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் : 700

திருக்குறள் காமத்துபாலில் உள்ள குறட்பாக்கள் : 250

திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் : 1330

திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது

திருக்குறளில் உள்ள சொற்கள் : 1400

திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் : 42194

திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் : 247 –ல்

37 மட்டும் இடம் பெறவில்லை

**M. ரேஷ்மா**
**V-Std**
**ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி**
**199 பேப்பர் மீல்ஸ் ரோடு,**
**பெரவள்ளூர்,சென்னை -11**

# GALLERY



Salem meet



Our new administrative office




With coordinators at Mayiladuthurai

# $10^{th}$ Anniversary glimpses







# மரங்கள்

அன்னை பூமியை
அநாதை இல்லங்களுக்கு
அனுப்பாது
அரவணைக்கும் - பூமியின்
புனிதப் புதல்வர்கள்
மரங்களே
தன்னை அறுப்பவர்
தம் இல்லக்
கதவாக இருந்து
காப்பது மரம் தான்!
இடுக்கண் புரியும்
மனிதர் தமக்கு
இன்னுயிர்க் காற்று தருவது
மரம் தான்!
மனிதனே நீ
மரமாவது எப்போது ?
வேண்டவே வேண்டாம்
மரங்களை வளர்த்திடு
மரங்களாவது
புனிதம் ஆகட்டும்.!

குரு.V

No:5, Chinnavalayam,
Ariyalur District
ஓரங்கிணைப்பாளர்
ஜெயந்தி கணேசன்
9095777483

## நூல் வேண்டி நூலகரிடம் கேட்டல்:

எனக்கு பிடித்த நூல் ஒன்றை நான் வாசித்து விட்டு மீதமுள்ளதை வாசிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் நூலகரிடம் கேட்டு அந்த நூலை மீண்டும் வாங்க வேண்டும் என்ற கருத்தை இக்கட்டுரையின் மூலமாக அறியலாம்.

**எனக்கு பிடித்த நூல்**

எனக்கு பிடித்த நூல் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான மதுரை காஞ்சி ஆகும். மதுரைகாஞ்சி நூல் மதுரையின் சிறப்புக்களை கூறுவதால் அந்த நூல் எனக்கு மிகவும் பிடிக்கும். இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டுமே சிறப்பித்துக் கூறுகின்றன. இதை “பெருகுவள மதுரைக்காஞ்சி” என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவார்.

**நூலின் ஆசிரியர்:**

எனக்கு மிகவும் பிடித்த நூலான மதுரைக் காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார் ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தார். எட்டுத் தொகையில் இவர் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

**நூலின் அவசியம்:**

இத்தகு சிறப்புமிக்க நூலை எனக்கு மீண்டும் வாசிக்க மிகவும் ஆர்வமாக உள்ளது. மேலும் இந்நூல் மதுரையைப் பற்றி அறியவும் மதுரையின் சிறப்புக்களைப் பற்றி அறியவும் இந்நூல் மிகவும் தெளிவான முறையில் பயன்படுகிறது.

**நூலகரிடம் விண்ணப்பம் :**

எனக்கு இந்நூல் பற்றி மேலும் அறிய இந்த புத்தகத்தை வாசிக்க விரும்புகிறேன். எனவே இந்நூலை எனக்கு நான்கு நாட்கள் மட்டும் வீட்டிற்கு தருமாறு தாழ்மையுடன் கேட்டுகின்றேன். மேலும் இந்நூலை நான் நான்கு நாட்கள் முடிந்தவுடன் ஐந்தாம் நாள் மீண்டும் தங்களிடம் பத்திரமாக ஒப்படைத்து விடுகிறேன்.

**முடிவுரை:**

எனக்கு பிடித்த நூலை நான் வாசிக்கும் படியாக நான் நூலகரிடம் கேட்டு அந்நூலை வாசிக்க நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறது என்றும் நாம் இக்கட்டுரையின் மூலமாக அறிகிறோம்

மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்கிசை நண்பனை அறைவனர் நுவல
குயம் குலைந்தன்ன இயம்தொட்டு இமிழிசை (அடிகள் 361-363)

மேலும் மதுரைகாஞ்சியில் இவ்வடிகள் அனைவருக்குமே பிடித்த அடிகளாக இருக்கின்றன.

வி. லோகேஸ்வரி
தூய அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி
ஒருங்கிணைபட்டாளர் ராஜேஸ்வரி டீச்சர்
மயிலாடுதுறை

## விடுகதைகள்

1. எரியும் ஆனால் குளிரும் அது என்ன ?
2. சுடும் எழுத்து எது?
3. குடுக்கை நிறைய வயிரமணி அது என்ன?
4. ஓர் எழுத்து பறக்கும், அது என்ன எழுத்து?
5. மாளிகையில் உள்ள முத்துக்கள் அவை என்ன?
6. ஒரு ஓட்டு வீட்டிற்கு ஓட்டைகள் ஏழு. அது என்ன?
7. வாய் சிறியது. வால் பெரியது அது என்ன?
8. பொரித்தது நடக்கும் அது என்ன?
9. சுட்ட குருவி ஊர் சுத்தப்போகுது அது என்ன?
10. அண்ணனுக்கு எட்டாது தம்பிக்கு எட்டும் அது என்ன,



விடைகள்

1. நிலா
2. தீ
3. மாதுளம் பழம்
4. ஈ
5. பற்கள்
6. தலை
7. அகப்பை கரண்டி
8. கோழிக்குஞ்சு
9. பலகாரம்
10. உதடு

A. நிஷா
V- Std
ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி
199 பேப்பர் மீல்ஸ் ரோடு,
பெரவள்ளூர்,சென்னை -11

## ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக

**முன்னுரை:-**

ஐவகை நிலங்கள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படுகிறது. இவற்றுள் எங்கள் ஊர் எந்த நிலங்களில் உள்ளது என்பதனையும் அதைப்பற்றி விரிவாகவும் இக்கட்டுரையின் மூலமாக காண்போம்.

**எங்கள் ஊர்**

ஐவகை நிலங்களில் எங்கள் ஊர் மருதம் நிலவகையைச் சார்ந்தது. மருதம் என்றால் 'வயலும் வயல் சார்ந்த இடமும்' என்பது பொருளாகும். எங்கள் ஊரைச் சுற்றி செடி, கொடிகள் , ஆலமரம், அரசமரம் என பசுமையாகவும் அழகாகவும் காணப்படுகின்றன்.

**கவின்மிகு காட்சி:**

- ❖ எங்கள் ஊரை சுற்றிலும் உள்ள மரங்களில் காகம், கிளி, குயில், குருவி முதலான பறவைகள் தங்கள் ஒலிகளை எழும்பும். அந்த ஒலிகள் கேட்பதற்கு இனிமையாகவும் மனத்திற்கு இன்பத்தையும் தருகின்றன.
- ❖ எங்கள் ஊரில் குளம், ஆறு என பல்வேறு நீர்நிலைகள் உள்ளன. குளத்தை சுற்றி உள்ள மரங்களில் இக்குழந்தைகள் ஊஞ்சல் கட்டி விளையாடுவார்கள். அக்குழந்தைகள் விளையாடிக் கொண்டே தாமரை மலர்கள் விரிந்துள்ள அக்குளத்தின் அழகை கண்டு ரசிப்பார்கள்.
- ❖ எங்கள் ஊரை சுற்றி வயல்வெளிகள், புற்கள் மிக அழகாகக் காணப்படும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையாகக் காணப்படும். அதனை தூரத்திலிருந்து காணும் போது பச்சைபசேலென்று அழகாகவும் அற்புதமாகவும் காணப்படும்.
- ❖ அந்த கவின்மிகு காட்சிகளை காணும் போது மனதிற்கு புத்துணர்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருக்கும்.
- ❖ பொதுவாக வயல் வெளியில் மரம் , செடி, கொடிகள் என்றாலே செழுமையான பகுதியாக காணப்படும். விவசாயமும் நன்கு நடைபெறும்.

- மேற்கண்ட படங்களை காணும் போது பச்சை போர்வையை போர்த்தியது போல் உள்ளது. எங்கள் ஊரில் விலையுயர்ந்த மரங்கள் ஆன தேக்குமரம், சந்தன மரம் போன்ற மரங்களும் காணப்படும். நிறைய புற்கள் காணப்படுவதால் அவற்றுள் சில ஆடு மற்றும் மாடுகளுக்கும் உணவாக கிடைப்பதால் மேலும் மகிழ்ச்சியாக உள்ளது.
- மேலும் மரங்கள், செடி, தாவரங்கள் , கொடி போன்றவை மனிதனின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பங்களிப்பை அளிக்கின்றன். வயல்வெளி, புற்கள் போன்றவை இல்லாவிட்டால் மனிதனின் வாழ்வே வெறுப்பானதாக மாறிவிடும். ஆகவே இவைகள் எல்லாம் இருக்க வேண்டும். நிறைய நிறைய இருக்க வேண்டும்



**முடிவுரை:** எங்கள் ஊரில் உள்ள வயல்வெளி, மரம்,செடி,கொடி போன்றவற்றின் அழகு பற்றியும் எங்கள் ஊர் எந்த நிலவகையைச் சார்ந்தது என்பது பற்றியும் இக்கட்டுரையின் மூலமாக நாம் அனைவரும் விரிவாகவும் தெளிவாகவும் அறிந்து உள்ளோம்.

**வி. லோகேஸ்வரி, IX-B ,தூய அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி**

## இசையே மருந்து

- இசையினால் நோய்கள் தீர்கின்றன.
- மனநோயாளியும் கொலைகாரர்களும் கூட அமைதி பெறுகின்றனர்.
- தாவரம் வளர்கின்றது.
- கல்மனமும் கரைகின்றது.
- வறட்சி நீங்கி, மழை, பெருகி வளம் கொழிக்கிறது.

## ராகங்களும் உணர்ச்சிகளும்

- மகிழ்ச்சி - காம்போதி
- கம்பீரம் - கல்யாணி சங்கராபரணம்
- வீரம் - நாட்டை
- துயரம் - புன்னாகவராளிஇ வராளி
- முறையீடு - மோனம்இ சாவேரி
- துக்கம் - கண்டராவம்
- மன உருக்கம் - மோகனம்


க. இராஜேஸ்வரி
M.A.(H):B.Lit
M.sc (Yogo)B.Ed.
ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை
7373684441

# பழமொழிகள்

1. உண்மையான செல்வம் பணமன்று : குணம்
2. மனிதன் உலகத்தோடு தனக்குள்ள உறவை உணராவிட்டால் அவன் வாழுமிடம் சிறைக்கூடம்
3. பணம்,மகிழ்ச்சி இரண்டும் பாம்பும், கீரியும் போன்றது.
4. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
5. அன்புள்ள இதயம் என்றும் இனிமையானது.
6. இளமையில் திருந்தாதவன் முதுமையில் தள்ளாடுவான்.
7. நண்பர்களுடன், புத்தகங்களுடனும் தொடர்பு வைத்துக் கொண்டே இரு.
8. மணிக்கணக்கில் செய்யும் உபதேசத்தை விட ஒரு கண நேரம் செய்யும் உதவியே உயர்வானது.
9. குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள்: குனியக் குனியக் கொட்டுபவனும் முட்டாள்
10. நல்லது செய்து நடுவழியே போனால் : பொல்லாதது போகிற வழியே போகும்.
11. தூக்கியெறியும் குதிரையை விட சுமந்து செல்லும் கழுதை மேலானது.
12. பணிவான சொற்கள் வாழ்க்கைப் பாதையை எளிமையாக்குகின்றன.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள

U.மதுஸ்ரீ
IX-C
Govt.Girls.Hr.Sec.School
Salem

## தமிழ் மொழியின் சிறப்புகள்

**முன்னுரை:-**

மொழி என்பது நம்முடைய எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்க உதவுவதாகும். நம் எண்ணங்களைப் பேச்சாலும் எழுத்தாலும் தெரிவிக்கின்றோம். முன்னோர் மனதில் தோன்றிய எண்ணங்களை அருமையாய் வெளிப்படுத்திய நமது தொன்மைத் தமிழின் அரும்பெரும் சிறப்புகளைப் பற்றிச் சற்று அலசி பார்ப்போம்.

**குடிச்சிறப்பு:-**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்தகுடி

நமது தமிழ்க்குடி தமிழன் தொன்மையைப் பற்றி அருதியிட்டு இறுதியாகக் கூற எந்த ஒரு ஆராய்ச்சியாளருக்கும் ஒரு தெளிவான முடிவு இல்லை என்பது நம் தமிழின் பெருமைக்குச் சான்றாய் அமைகிறது. நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல நமது தாய்த்தமிழ். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி நிற்பது நமது அழகிய தாய்த்தமிழ்!.

**அறம் வளர்த்த தமிழ்**

பண்டைய தமிழ் நூல்கள் பெரும்பாலும் அறநூல்கள், அறம் வைத்துப்பாடுதல் நமது தமிழ் பாடல்களில் வழக்கமான தொன்று. நந்திவர்மன் கூட இனிய தமிழ்ப்பாடல் கேட்க வேண்டி, புலவர் வடிவில் வந்த எதிரி மன்னனின் அற்புதப் பாடலால், பச்சை விறகு பற்றி எரிய தம் இன்னுயிரினை நீத்து அழியாப்புகழ் எய்தினான் என்பது இலக்கியங்கள் கூறும் உண்மை! இதைப் போன்ற அறப்பாடல்கள் உலகில் எம் மொழியிலும் இல்லையென்று உறுதியாகக் கூறிவிடலாம்.



**செம்மொழித் தகுதிப்பாடுகள்:-**

தொன்மை, பிறமொழித் தாக்கமின்மை, தாய்மை, தனித்தன்மை, இலக்கியவளம், இலக்கணச்சிறப்பு, பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, பண்பாடு கலை

பட்டறிவு வெளிப்பாடு உயர்ந்த சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை, வெளிப்பாடு மொழிக்கோட்பாடு முதலியவை செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளாக மொழியியலார் கூறுகின்றனர்.

**இலக்கிய வளம் :**

உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றுள்ள சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் 26350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறெந்த மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆராய்ந்த ‘செக்’ நாட்டு மொழியில் பேரறிஞர் கமில் சுவலபிலின் கருத்தாகும்.

மாச்சுமல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும் பாராட்டியிருக்கிறார். அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கிறார்.

**இலக்கணச் சிறப்பு**

தமிழ் மொழியின் இலக்கண அமைப்பானது, தனிச் சிறப்புடையது; நுண்ணிய அறிவை உண்டாக்கவல்லது. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது தொல்காப்பியம். இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்பது பெயர்.

**முடிவுரை:**

நம் தமிழ்மொழியாம் சீர்மிகு செம்மொழி
வானம் அளந்தது அனைத்தும்
அளந்திடும் வண்மொழி
எனவே நாம் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம்
வாழ்க தமிழ்!
வெல்க தமிழ்!

பெயர்: மோ. மஞ்சு
வகுப்பு : 10
பகுதி: சென்னை
ஒருங்கிணைப்பாளர்: R.பெத்தபெருமாள்

## நெகிழி (பிளாஸ்டிக்) இல்லாத தேசம்

## கவிதை

அழகிய நம்தமிழ் நாட்டில்

ஆனந்தம் பெருக வேண்டின்

பழகிடும் பாலித்தின் பிளாஸ்டிக்

பயன்பாடு குறைய வேண்டும்!


உழவுக்கு ஊறு செய்யும்

நெகிழிக்கு விடை கொடுத்தால்

அழகிய பூமி மீண்டும்

ஆரோக்கி யத்தை தீண்டும்!

அரசாணை வந்து விட்டது!



அதைச்செய்ய தயக்கம் ஏனோ?

முரசாணை வந்த பின்னும்

மூட்டிய தீயது எரியாதோ

இன்றோடு வாழ்க்கை முடியாது!

எதிர்கால மின்றி மடியாது!

அன்றுநம் பூமியொரு பூஞ்சோலை !

அழகிய பூமிதானே பாடசாலை!

மு. நூர்ஜஹான் IX

**முன்னோர் அருளுரை**

என் இனிய குழந்தாய் ! வசதியில்லையே எனக் கூறாதே நீ இருக்குமிடத்தையே வசதியாக்கிக் கொள். சகலமும் உன் வசமானால் தான் மனம் அலைவது குறையும். கடன் பெறாமல் தராமல் வாழக் கற்றுக்கொள். பொருளைப் போலலே அருளிலும் நம்பிக்கை வை. முன்னோர் முயற்சிகளின் பலனையே நாம் நுகர்கின்றோம். விஞ்ஞானம் மெய்ஞானம் அனைத்தும் முயன்று பெற்றதே. உடலுக்கு உணவு எப்படி அவசியமோ அது போல மனதிற்கு நல் அறிவும் அவசியம் தேவை. அருளாலும் பொருளாலும் உன் வாழ்வை வளமாக்கி வாழ்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

வேம்பு
ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை
90256 67347

# Nagercoil Meet 2018









RESOURCE CENTRE
KADAYAL

## அம்மா கவிதை



அம்மாவுக்கு என்று தனியாக கவிதை வேண்டாம் அன்பாக பழகிப்பார் அம்மாவே கவிதை தான்.

உலகில் தேடி தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் தாயின் மடி

ஆயிரம் முறை காயப்பட்டாலும் தன்னை ஒரு முறைக் கூட காயப்படுத்தாத உறவு அம்மா

தமிழில் அம்மா என்ற சொல் எப்படி வந்தது தெரியாது ஆனால் அன்பு என்ற சொல் நிச்சயம் அம்மாவில் இருந்து தான் வந்திருக்கும்.

நீ கனவில் கண்ட பெண்ணை விட உன்னை கருவில் சுமந்த தாயை நேசி.

சு. சுகந்தி

7-ஆம் வகுப்பு

**பேசக் கற்றுக் கொள் எம் மொழியை**

**தடுக்கி விழுந்தால் மட்டும் அ ஆ**

**சிரிக்கும் போது மட்டும் இ ஈ**

**சூடு போட்டால் மட்டும் உ ஊ**

**அதட்டும் போது மட்டும் எ ஏ**

**ஐயத்தின் போது மட்டும் ஐ**

**அச்சத்தின் போது மட்டும் ஒ ஓ**

**வணக்கத்தின் போது மட்டும் ஔ**

**விக்கலின் போது மட்டும் ஃ**

**என்று தமிழ் பேசி மற்ற நேரங்களில்**

**வேற்று மொழி பேசும் தமிழர்களிடம்**

**மறக்காமல் சொல் உன் மொழி**

**தமிழ் மொழி என்று !!!..........**

## எம் தாய் மொழி

தீயவர்களை திருத்துமாம் திருக்குறள்!

இவ்வையகத்தையே இரசிக்க வைக்கும் பாரதி பாடிய பாடல்!

என் முன்னோர் கண்ட காவியத்தை கண்டு வியக்கிறேன்.

தேனாக ஓடிய எமது தாய் மொழி

அழியும் விளிப்பில் உள்ளது என்று அறிந்தவுடன் என் விழிகளிலிருந்து

கண்ணீர் வடிகிறது. ஆனால் மீண்டும் எனது சந்ததி இந்த

மொழியை கற்பார் என்று நினைக்கையில் என் உள்ளம் சிலிர்க்குதடி

ஒருங்கிணைப்பாளர் : மூர்த்தி

G.ஈஸ்வரி

V- Std

ஊ. ந. நி. பள்ளி

## சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சிறப்புரைகள்

அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே!

இன்பமும் இதமும் கலந்த உங்கள் வரவேற்புக்கு பதிலளிக்க இப்போது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகில் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு கூறுகின்றேன். எல்லா மதங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்த மக்களின் பெயரால் நன்றி கூறுகின்றேன்.

இந்த மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் சிலர் கீழ் திசை நாடுகளில் இருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றி குறிப்பிடும் போது பிற மதங்களை வெறுக்காத பண்பினை பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை தொலைவில் உள்ள நாடுகளில் இருந்து வந்துள்ள இவர்களையே சாரும் என உங்களுக்கு கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி!

பிற மத கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இருபண்புகளை உலகுக்குப் புகட்டிய மதத்தைச் சார்ந்தவன் நான் என்பதில் பெருமையடைகிறேன்.

**மீரா ஜாஸ்மின்**
**6-ம் வகுப்பு**
**ஸ்ரீ சக்தி மெட்ரிக்குலேஷன் பள்ளி**
**வனவாசி**
**ஒருங்கிணைப்பாளர் : மூர்த்தி**

## மனம்

மனமே உன் இருப்பிடம் எங்கே?
உன் எடையும் உருவமும் எங்கே?
எனக்கு தெரியவில்லையே !
என்னால் உணர முடியவில்லையே!

கண்ணில் கண்ணீர்! இதயத்தில் வலி!
இதெல்லாம் மனதின் வெளிப்பாடா!
வீண் பெருமையும் வீண் செலவும்.
மன வருத்தத்தின் வெளிப்பாடா!
நீ எனக்கு புரிய வைத்தால்
நான் மகிழ்ச்சியாக வாழ்வேன்.

**Usha Titus, Nagercoil**

## புது மொழிகள்

அனுபவமே இந்த உலகை ஆளும்
தோல்வி தந்த பாடம் வெற்றியில் முடியும்
கடந்து போன நாட்கள் திரும்ப வராது
சுதந்திர காற்றின் சுவாசம் சுகமானது
பணத்தை தேடுவதை விட நல் மனிதர்களை தேடுவது மேல்

S.V.வனிதா கலா

**சுற்று சூழல் விழிப்புணர்வு**

**முன்னுரை:**

'சுற்றுச் சூழல்' மாசுபடுதல் என்ற அழுகைக்குரல் இன்று உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. சுற்றுச் சூழலைப் பற்றி ஒவ்வொரு மனிதனும் விழிப்புணர்வு பெற வேண்டுமென்பதற்காக அரசும், தனியார்களும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களும் அயராது பாடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் ஜீன் 5-ஆம் நாள் உலக சுற்றுச் சூழல் தினம் " கொண்டாடப்படுகிறது. நாம் சுற்று சூழல் விழிப்புணர்வைப் பெற்று, பிறருக்கும் கற்றுக் கொடுத்து விழிப்புணர்வை எவ்விதம் விதைக்க வேண்டும் என இக்கட்டுரையில் காண்போம்

.

**'சுற்றுச் சூழல்' சொல் விளக்கம்:-**

சுற்றுச் சூழல் விழிப்புணர்வைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் 'சுற்றுச் சூழல்' என்றால் என்ன? என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

'சுற்றுச் சூழல்' என்னும் சொல் 'என்விரோன்னர்' என்ற பிரெஞ்சு சொல்லிலிருந்து உருவாகியது. இது சுற்றுப்புறத்தைக் குறிக்கும் சொல். சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றி சூழ்ந்து பரிணமிக்கும் அனைத்து பரிமாணங்களையும் குறிக்கும்.

"சூழலியல்" என்னும் சொல் "ஆய்கோஸ்" என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து உருவாகியது. இது வாழும் இடத்தை குறிக்கும்.

சுற்றுச் சூழல் என்றால் என்ன?

சுற்றுச் சூழல் என்பது உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தும் அடங்கும். நுண்ணுயிர் முதல் மனிதர்கள் வரை நிலம், நீர், காற்று, வாயு, நெருப்பு, சக்தி, புவி ஈர்ப்பு, தட்பவெப்பநிலை, காந்ததன்மை, பொருண்மை, மரம், செடி, கொடிகள், புல், பூண்டுகள் அனைத்தும் சுற்று சூழலில் உள்ளடங்கும் காரணிகளாகும். எனவே மனிதனின் மகிழ்ச்சியான, வளர்ச்சியான ஆரோக்கியமான முழு வாழ்வில் சுற்றுச் சுழல் மிகவும் அவசியமானதாகும்.

**<u>சுற்று சூழல் விழிப்புணர்வு:</u>**

இன்று சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒவ்வொரு மனிதனையும் பாதிக்கிறது. ஒரு தனி மனிதனைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பற்றிய விழிப்புணர்வே சுற்றுச் சூழல் விழிப்புணர்வு எனப்படும்.

சுற்றுசூழல் தனிச் சொத்தல்ல. பொதுச் சொத்து. அது அனைவருக்கும் பொதுவானது. சுற்றுச் சூழல் ஒருவரை முறையுடனும் நெறிமுறையுடனும் ஒழுங்கு முறையுடனும் ஒன்றோடொன்று இணைந்து ஒருங்கிணைந்த முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. சுற்று சூழலை அழிக்கவோ அனுபவிக்கவோ நமக்கு உரிமையில்லை. சுற்று சூழல் மனிதர்களுக்கு இறைவன் கொடுத்த இலவசமான பரிசு.



**சுற்று சூழலே சுகமான வாழ்வின் மருந்து.**

சுற்றுச் சூழல் தான் மனித சமூகத்தின் நலமான, சுகமான வாழ்விற்கு அரணும், பாதுகாப்பும் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். சுற்றுச் சூழலில் காணப்படும் மரம், செடி, கொடிகள் , புல் பூண்டுகள், மூலிகைகள், தாவரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் போன்றவற்றிலிருந்து தான் பெரும்பாலான மருந்து வகைகள் தயாரிக்கப்படுகின்றன. சுமார் 70000 வகையான தாவர உணவு மற்றும் மருந்து வகைகளை மனிதர்கள் பயன் படுத்தி உள்ளனர். இன்று இது பற்றிய விழிப்புணர்வு இன்றி செயற்கை மருத்துவத்தில் தன்னை ஈடுபடுத்தி பொருளாதாரத்தையும் இழந்து மனிதன் உயிர் இழந்து கொண்டிருக்கிறான். செயற்கை மருந்துகள் மனிதர்களுக்கு பின் விளைவுகளை ஏற்படுத்தும் எனவே தான் இன்று “நஞ்சில்லா விவசாயம் ,வீட்டு தோட்டம்” என்ற விழிப்புணர்வு மக்கள் மனதில் விதைக்கப்படுகிறது.

**சுற்றுச் சூழல் மாசுபடுதல்:**

சுற்று சூழலை பேணி பாதுகாக்காமல் அப்புறப்படுத்தி வரம்பு மீறுவதால் தண்ணீர், காற்று, பூமி மட்டுமல்ல வானத்திலும், வனாந்திரத்திலும் கடலிலும், கடலின் ஆழத்திலும் இன்று குப்பை மேடுகள் குவிந்து அழுக்குகள் அடுக்காகி கிடக்கின்றன. இன்று நாம் தெரிந்தோ, தெரியாமலோ சுற்றுக் சூழலை சேதப்படுத்துகிறோம்.

பூச்சிக் கொல்லி, பூஞ்சாணைக் கொல்லி, களைக் கொல்லி இவைகளை பயன் படுத்துவதால் மண்வளம், மலைவளம் பாதிக்கப்படுவதோடு மலட்டு மரங்களையும் செடி கொடிகளையும் உருவாக்குகின்றன. இயற்கை வளங்களை அழித்து தொழிற் சாலைகள் அமைத்தல், சதுப்பு நிலக்காடுகளை அழித்து வனப்பு நிறைந்த கட்டடங்களை கட்டுதல், வளங்களை வீணடித்தல் கதிர் வீச்சுக்களை கழிவுகள் அணு ஆயதக் குவிப்பு பவளப் பாறைளை சேதப்படுத்தல், மிதமிஞ்சிய தொழில் வளர்ச்சியால் மட்காத வேஸ்ட் குப்பைகள் போன்றவற்றால் சுற்றுச் சூழல் அழியும் பேராபத்து ஏற்பட்டுள்ளது. இன்று பழைய பாழடைந்த பேருந்துகளும் வாகனங்களும் கக்கும் புகையால் மக்கள் காசநோய் பிடித்தவர்களாக காட்சி தருகிறார்கள்.

**நஞ்சாக மாறும் சுற்றுச் சூழல்:**

இன்று சுற்று சூழல் நஞ்சாகிக் கொண்டிருக்கிறது. அது நம் காதுகளை துளைக்கின்றது. நெஞ்சை பிளக்கின்றது. இதயத்தை கிழிக்கின்றது. பணம் தான் எல்லாம் என்கிற பார்வையும் பணமில்லாமல் வாழ்வது பிணத்திற்குச் சமம் என்கிற எண்ணமும் எதையும் செய்ய மனிதனை தூண்டுகிறது. நச்சுத்தன்மையுள்ள இராசாயன உரங்களையும் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பிளாஸ்டிக் மற்றும் இ-வேஸ்ட் கழிவுகளையும் நஞ்சாக மனிதன் மாற்றுகின்றான்.

**மாசு படுவதால் ஏற்படும் விளைவுகள்**

பருவ நிலை மாற்றம்,பருவ மழை மாற்றம், ஏரிகள் , குளங்களின் வறட்சி, பூமியின் மலட்டுத் தன்மை, ஓசோன் படலத்தில் ஓட்டை, புவி வெப்பமாவதால் பசுமைத் தன்மையின் அழிவு, அதிக அளவு கதிர் வீச்சு, உணவில் நச்சுத்தன்மை, நீர்வளம் அழிதல், புது புது நோய்கள், புற்று நோய், முடக்கு வாதம் ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகரித்தல், எலி, பறவை, பன்றிக் காய்ச்சல் இதய நோய்கள், இருமல் இயற்கை சீற்றங்கள் உலகமே பாலைவனமாக காட்சியளித்தல் போன்ற பல விளைவுகள் ஏற்படுகின்றன.

நாம் வாழும் இடம், பணி செய்யும் இடம், பொது இடம் போன்றவற்றை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மட்காத பிளாஸ்டிக் வகைகளை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்

சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு நலமான வாழ்வு, தூய்மையான வாழ்வு, சுகாதாரமான வாழ்வு போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பொது இடங்களில் மலம் கழிப்பது முற்றிலும் தவறு என்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

புகையில்லா சமூகம் உருவாக மாற்று வழிகளை கையாள முயற்சி எடுக்க வேண்டும்.

**மரம் செடி கொடிகளை வளர்ப்போம்.**

இயற்கை விவசாயம் வீட்டுத் தோட்டம் ஆதரிப்போம்

தூய்மை இந்தியா திட்டத்தை பரவலாக்குவோம்.

முடிவுரை:

சுற்று சூழல் விழிப்புணர்வு என்பது காலத்தின் கட்டாயம் சுற்றுச் சூழல்ப் பற்றி விழிப்புணர்வு அடையாத ஒருவரால் இவ்வுலகத்தில் முழு மனிதராக வாழவே முடியாது. எனவே, தன்னைச் சுற்றி சுற்றுச் சூழலால் என்னனென்ன மாற்றங்களும்

சீற்றங்களும் எழுகின்றன என்பதில் விழிப்புணர்வு அடைவோம். விழிப்புணர்வை விதைப்போம். நல்வாழ்வை சுவைப்போம் சுகமான நலமான வாழ்வு வாழ்வோம். உயிர்களை மதித்து இயற்கையைப் போற்றுவோம். சுற்றுச் சூழலை பேணுவோம். நோயற்ற வாழவு வாழ்வோம்.

விழிப்போம்! விழிப்புணர்வு கொள்வோம்!!

ஜி. கிறிஸ்டி லீலா

ஒருங்கிணைப்பாளர்

**இந்த நாள் இனிய நாள்**

**வாழ்வில் கவனிக்க வேண்டிய ஏழு விஷயங்கள்**

1. கவனி உன் வார்த்தைகளை
2. கவனி உன் செயல்களை
3. கவனி உன் எண்ணங்களை
4. கவனி உன் நடத்தையை
5. கவனி உன் இதயத்தை
6. கவனி உன் முதுகை
7. கவனி உன் வாழ்க்கையை

**நல்வாழ்வுக்கான ஏழு விஷயங்கள்**

1. மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள்
2. களங்கமின்றி சிரிக்க கற்றுக் கொள்ளுங்கள்
3. பிறருக்கு உதவுங்கள்
4. யாரையும் வெறுக்காதீர்கள்
5. சுறுசுறுப்பாக இருங்கள்
6. தினமும் உற்சாகமாக மற்றவை வரவேற்கத் தயாராகுங்கள்
7. மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்

T.அனுஷா ராணி

பத்துகாணி

## வாழ்க்கை தத்துவங்கள் - 21

| | | |
|---|---|---|
| அழிவை தருவது | - | ஆணவம் |
| ஆபத்தை தருவது | - | கோபம் |
| இருக்க வேண்டியது | - | பணிவு |
| இருக்கக் கூடாதது | - | பொறாமை |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| கண்கண்ட தெய்வம் | - | பெற்றோர் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக் கூடாதது | - | துரோகம் |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| நழுவ விடக் கூடாதது | - | வாய்ப்பு |
| நம்முடன் வருவது | - | புண்ணியம் |
| பிரியக் கூடாதது | - | நட்பு |
| மறக்க கூடாதது | - | நன்றி |
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப் பெரிய தேவை | - | அன்பு |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| வந்தால் போகாதது | - | பழி |
| போனால் வராதது | - | மானம் - |

R.சுந்தர பாய் Resource Centre

# அழகு

கடலுக்கு அழகு அலை

சிப்பிக்கு அழகு முத்து

பூவுக்கு அழகு மணம்

வானுக்கு அழகு விண்மீன்

உழைப்புக்கு அழகு உயர்வு

நட்புக்கு அழகு பாசம்

அன்புக்கு அழகு அம்மா !

மயிலுக்கு அழகு தோகை

பேச்சுக்கு அழகு வார்த்தை

பெண்ணுக்கு அழகு பெருமை

ஆணுக்கு அழகு வீரம்

குழந்தைக்கு அழகு மழலைப் பேச்சு

மொழிக்கு அழகு தமிழ் மொழி


P.மேரி

Resource Centre

## வெற்றியின் குரல்

வாழவும் பயப்படாதே !

சாகவும் பயப்படாதே !

அமைதியாய் இரு ! அடிமையாகி விடாதே

மரமென்றால் வேரேடு

வாழ்வு என்றால் போராடு !

துக்கத்தை மறைத்துக் கொள் !

முயற்சி என்னும் வாள் எடுத்து

பயிற்சி என்னும் போர் தொடுத்து

வெற்றி என்னும் மலர்சூடி

வாழ்க்கையை வென்று வா !



P.மேரி
Resource Centre

## நல்லவை முப்பது

1. செய்ய நினைத்ததை உடனே செய்
2. குறைந்தது ஒரு நாளைக்கு 8 டம்ளர் நீர் அருந்து
3. ஒரு நாளைக்கு ஒரு முறையாவது வாய் விட்டு சிரி
4. விரும்பும் நல்ல புத்தகத்தை படி
5. தினமும் ஒன்றை புதிதாக அறி
6. பழைய நண்பர்களை சந்தி
7. நடை பயிற்சி செய்
8. பழம் காய்கறி தினம் உண்
9. நண்பரிடம் பகிர்
10. கவிதை இலக்கியம் படி
11. பிறரை மனதார பாராட்டு! ஊக்குவி
12. பிறரை மகிழ்வி
13. ஏதாகினும் மன்னித்து விடு
14. போறாமை பேராசை கோபம் விலக்கு
15. அனைத்தையும் துணிவாக எதிர் கொள்
16. எல்லாம் நன்மைக்கே என நினை
17. குழந்தைகளிடம் அன்பை மட்டுமே விதை
18. மனம் உடல் ஆரோக்கியம் பேணு
19. எப்போதும் வெற்றி சாத்தியமல்ல என உணர்
20. சிறு சிறு தோல்வி அவசியம்
21. நல் நண்பர்கள் நமக்கவசியம்
22. நம்பிக்கை அவசியம் ஆனால் தன் பலம் உணர்
23. பிறரிடம் நல்லதையே நோக்கு
24. கடந்த காலத்தின் பாடம் உணர்
25. நிகழ்காலம் பயன்படுத்து
26. இன்முகம் பழகு
27. வெற்றி பணம் பொருள்
28. மகிழ்ச்சி மனதைப் பொறுத்தது
29. இறை நினை
30. தீதும் நன்றும் பிறர் தர வரா

T.அனுஷா ராணி

ஒருங்கிணைப்பாளர்

## முதியோரைப் பேணுவோம்

‘கருவறையை இருட்டறையாக்காமல்
ஒளி வீசிட மெழுகாய் உருகினேன்’

**முன்னுரை**

அக்டோபர் 1-ஆம் தேதி அகில உலக முதியோர் தினம். குடும்பத்தின் விளக்காக ஒளி வீச வேண்டிய முதியோர்கள் இன்று ஒதுக்கப்பட்டு முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார். முதியோரின் எதிர்பார்ப்பு, பராமரிப்பு நிலை, இட அமைப்பு, உளவியல் நிலை நோய்கள், பொருளாதார நிலை, சமூக நிலை கலந்துரையாடல், புள்ளி விவரம் இவைகளை கீழ்கண்ட தலைப்புகளில் விளக்கப்படுகின்றது.

**எதிர்ப்பார்ப்புகள்**

‘பசித்தால் பசியாற்றிட பிள்ளைகளின் அன்பை நாடினேன். அம்மா இன்று பசிக்காமல் இருக்க மன வேதனையை கொடுத்தாயே என்று முதியோர்கள் ஏங்குகின்றனர். பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாய் அமைய தன்னிடம் உள்ள பொருளெல்லாம் விற்று படிக்க வைத்தனர். பிள்ளைகள் படித்து வேலை கிடைத்தபின் தங்களை பார்ப்பார்கள் என்ற ஆசையை மனதில் வளர்த்து வந்தனர். ஆனால் பிள்ளைகள் வேலை தேடி வெளி நாடுகளில் செல்வதால் முதியோரை பாதுகாக்க இல்லை என்ற ஏக்கம் அவர்களிடம் இருக்கின்றது. வாழ பொருளாதார வசதியின்றி பல முதியோர்களும் அவதிப்படுகின்றனர். பிள்ளைகளிடம் பணம் வாங்கி செலவு செய்ய எதிர்பார்க்கின்றனர். இது கிடைக்காத போது வெளி நபர்களிடம் பணத்திற்கு கையேந்தி நிற்கின்றனர். அரசிடமிருந்து கிடைக்கும் சலுகைகளை எதிர்பார்க்கின்றனர்.

**பராமரிப்பு நிலை**

பிள்ளைகள் வேலைக்கு செல்வதால் பராமரிப்புக்கு ஆளில்லாமல், சுத்தமின்றி நோய் கிருமிகள் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இதனால் மன உளைச்சல் ஏற்பட்டு குறைந்த வயதிலேயே இறக்க நேரிட வேண்டி இருக்கிறது. பெரும்பாலும் முதியோர்கள் தங்களுக்கு நோய் இருக்கிறது என்று தெரிந்தும் வெளியே சொல்வதில்லை. காரணம் பிள்ளைகள் வருத்தப்படக் கூடாது. பணச்செலவு வராமல் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

**வீட்டு இட அமைப்பு**

இயற்கை சூழ்நிலைக்கேற்ப வீடுகளை கட்டி வாழ்ந்தவர்கள் இன்றைய நாகரீக உலகில் அடுக்கு மாடி வீடுகள் வந்த காரணத்தால் தாங்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல் மிகவும் அவதிபடுகின்றனர். அன்றைய காலங்களில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தனர். அனைவரும் சேர்ந்து விட்டு பேசுவது, உணவு சாப்பிடுவது, முடிவெடுப்பது இது போன்ற செயல்கள் நடைபெற்றது. இப்போது அடுக்குமாடி வீடுகள் அமைத்து தனிக் குடித்தனம் செல்கின்றனர். பெற்றோர், பேரப்பிள்ளைகள் என உறவுகள் இழக்க நேரிடுகின்றனர். நாகரீக வாழ்க்கையை அனைவரும் பின்பற்றுவதால் முதியோரின் வாழ்க்கை பயத்திற்கு அடிமையாகின்றன. வசதியின்றி தவிக்கின்றனர். ஒரு சிலரை வேலைக்கு ஆள் வைத்து பார்க்கின்றனர்.

**உளவியல் நிலை**

இன்று 56% முதியோர்கள் பாதுகாப்பிற்கு ஆளின்றி தனிமையில் வாழ்கின்றனர். இதிலும் பாதி நபர்கள் வாழ்க்கை துணையை இழந்தவர்கள். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மருமக்கள் இவர்களோடு பேசி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏங்குகின்றனர். வெளியிடங்களில் செல்ல துணைக்கு ஆளில்லாமல் ஏங்குகின்றனர். பொருளாதார குறைபாட்டால் நோய்க்கு மருத்துவம் செய்ய இயலாமல் பெரும் அவதிப்படுகின்றனர். மனதிற்கு பிடித்த உணவு மற்றும் சத்தான உணவு கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். பெற்ற பிள்ளைகளின் அன்பின்மை, பேரப் பிள்ளைகள் பேசாதது, சமூகம் ‘கிழடு’ என்று சொல்லி கேலி பண்ணுவது, பொது இடங்கள், பஸ் பயணம் இவைகளில் மதிக்காதது குடும்பங்களில் பொது நிகழ்வுகளுக்கு ஒதுக்கி வைப்பது, பண வசதியின்மை, ஓய்வு பெற்ற பின்னும் வேலை பார்ப்பது, அடிப்படை வசதியின்மை, குடிகார பிள்ளைகளின் அடி உதை இது போன்ற பிரச்சினைகள் காரணமாக மன வேதனைபட்டு மன நோய்க்கு ஆளாகின்றனர்.

**சமூகத்தில் முதியோர் நிலை**

படிக்காதவர் என்ற அவல நிலை, முதியோரை மதிப்பது கிடையாது. பஸ்ஸில் பயணம் செய்யும் போது இருக்கை வசதி செய்து கொடுக்காதது, மருத்துவமனையில், கோவில்களில் போதுமான முன்னுரிமை,

பாதுகாப்பின்மை ‘அறுவது தாண்டினால் அடங்கிடு’ என்ற கேலி வார்த்தைகளை எங்கு சென்றாலும் காதில் ஒலிக்கும் குரல் எடுத்துக் காட்டாக சுய உதவிக் குழுக்களில் 60 வயதுக்கு மேல் இருக்கக் கூடாது. கடன் கொடுக்கக் கூடாது என்ற சட்டம் கொண்டு வந்தது. ஆண் பிள்ளைகளோ, சொத்தோ வீடோ இருந்தால் பென்ஷன் கிடைக்க தகுதியின்மை, இது போன்ற பல்வேறு பிரச்சினைகளால் சமூகத்தில் பாதிக்கப்படுகின்றனர். இன்று 2018 கணக்குப்படி 13.3% நபருக்கு தான் ஓய்வூதியம் கிடைக்கின்றது.



**<u>கலந்துரையாடலின் முக்கியத்துவம்</u>**

குடும்ப வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் முதியோர்கள். முதியோர் வாக்கும் முது நெல்லிக்காயும் முன்பே கசக்கும். பின்பு இனிக்கும் என்ற பழமொழிக்கு இணங்க முதியோருக்கு மதிப்பு கொடுப்பதால் பிள்ளைகளின் வாழ்க்கைத் தரம் உயரும். இளம் தலைமுறையினர் வழி தவறாமல் இருக்கமுடியம். உளவியல் நீதி ஆய்வு படி ஒரு நாள் 2 மணி நேரமாவது முதியோரிடம் கலந்துரையாடல் செய்ய வேண்டும். இதனால் கற்பழிப்பு, தற்கொலை, பாலியல் கொடுமை, காதல் திருமணம், திருட்டு, கருக்கலைப்பு இது போன்ற அநியாயங்களிலிருந்து விடுபடலாம்.

**<u>உடல் நோய்கள்:</u>**

சர்க்கரை நோய், உயர் /தாழ் இரத்த அழுத்தம், மனநோய், வாதம், இதய நோய், பக்கவாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு பெரிதும் அவதிப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனையால் உண்டாகும் மன அழுத்தம்.

புள்ளி விவரம் 2011 கணக்குப்படி : 104 மில்லியன்

51 மில்லியன் பெண்

மில்லியன் ஆண்
முதியோர் ஆயுள் காலம் : ஆண் 66
பெண் 70

**முதியோரை பேணி காப்பதில் நமது கடமை**

1. வீடுகளில் குழந்தைகளிடம் பெரியோரை மதிக்க கற்றுக் கொடுப்பது
2. பள்ளி கல்லூரிகளில் முதியோரை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவம் புரிய வைத்தல்
3. முக்கிய நிகழ்வுகளில் முதியோருக்கு முன்னுரிமையும் அமைதியும் கொடுத்தல்
4. அனைவருக்கும் பென்ஷன் திட்டத்தை உருவாக்க அரசை ஊத்துவித்தல்
5. ஆண்டு தோறும் முதியோர் தினம் நடத்தி அவர்களை கௌரவித்தல்
6. பாதுகாப்பின்றி காணப்படும் முதியோர் குடும்ப உறுப்பினர்களை சந்தித்து அவர்கள் வாழ்க்கையில் திருப்பத்தை கொண்டு வருதல்
7. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை அமைத்தல்

**முடிவுரை:**

இன்று குடும்பத்திலும் சமூகத்திலும் முதியோரை ஒதுக்கி வைப்பது, கொலை செய்வது, முதியோர் இல்லத்தில் சேர்ப்பது, கிண்டல் செய்வது இது போன்ற பிரச்சனைகள் மாற குழந்தைகளிடமிருந்தே முதியோர் பாசத்தை உருவாக்கி அதற்கேற்ற விழிப்புணர்வு தொண்டு நிறுவனம் மற்றும் அரசு இதற்கு முன் வந்தால் முதியோர்கள் இந்த அவல நிலையிலிருந்து விடுபடலாம்.

**எம். ராஜன் ஒருங்கிணைப்பாளர்**

## பெண் சிசு கொலை

பத்து மாதம் சுமந்தாய் என்னை

பூமியில் வாழ வைக்க – வயிற்றினுள்

மிதித்தேன் அன்று மகிழ்ச்சியாய் ஏற்றாய் !

இன்று பெண் என்று தெரிந்ததும்

வலிக்கிது உன் இதயம் தாயே !

பாலுக்கு ஏங்கினேன் அம்மா

நீ எனக்கு கள்ளிப்பாலா ஊட்டினாய்

இனிப்பு தருவாய் என்று எதிர்பார்த்தேன் - நீ

எனக்கு நெல்லி விதை ஊட்டி வைத்தாய்

உன் முகத்தை பார்க்க ஆசைப்பட்டேன் !

என் கண்ணை அழித்து விட்டாய் !

உன்னை பாசம் செய்ய நினைத்தேன் !

என் இதயத்தை புதைத்து வைத்தாய் !

உன்னோடு நடக்க ஆசைப்பட்டேன் !

என் காலை ஒடித்து விட்டாயே !

உனக்கு வேலை செய்து உதவ ஏங்கினேன்

என் கையை தூக்கி எறிந்தாய் !

ஆசைப்பட்ட உணவை உண்ணக் துடித்தேன் !

உணவுக்கு பதிலாய் நஞ்சை கொடுத்தாய்

இனிய குரலில் பாட ஆசைப்பட்டேன் !

என் நாவை அறுத்து விட்டாய்

இயற்கையின் குரலை கேட்க ஆசைப்பட்டேன்

என் காதுக்கு மண்ணை போட்டாய்

பலருக்கு உதவி செய்ய ஆசைப்பட்டேன்

என்னை உலகுக்கு வரவே விடவில்லையே

உன்னை அன்பு செய்ய நினைத்தேன் !

என் அன்பை கயிற்றால் கட்டி விட்டாயே

என் ஆசைக்கு நீ கயிறு கட்டினாலும்

உன்னை வலம் வந்து என்றும்

உன்னோடு இருப்பேன் அம்மா

ஒரு தடவை கூட உன் கருப்பையில்

இடம் தருவாயோ அம்மா – நான் -

உன்னில் பிறந்து மகளாயிருக்க

**கவிதை- முதியோர்**

பல வருடம் தவமிருந்து தாயாக வேண்டுமென்று பல வருடம் துடிக்கின்றேன். அம்மா என்ற கேட்க வயற்றினுள் உதைத்தாய் மகிழ்ச்சியோடு நெஞ்சினுள் குத்துகிறாய் வசைச் சொல்லால்.

படிப்பில்லா என் வாழ்க்கை மனதிற்கொண்டு

பட்டப் படிப்பை உன் வாழ்வில் தந்தேன்- இன்று

உன்னை படிக்க வைக்க பலர் கையேந்தி நின்றேன்

என்னை வாழ வைக்க பலர் கையேந்தி நின்றேன்-இன்று

உடம்பிற்கு ஏற்ற உடை உடுத்தி அழகு பார்த்தேன்

உடையின்றி தவிக்கிறேன் நான் -இன்று

வேலை கிடைக்க தவமிருந்து வரம் கேட்டேன்

நீயோ! என்னை கவனிக்க மறந்து விட்டாய்.

ஊதியத்தை காண்பதற்கு ஆசைப்பட்டேன்

நீயோ! காசில்லா நடைபிணமாக்கிவிட்டாய்

அன்புவோடு வாழ ஆசைப்பட்டேன்

நியோ! சொந்த பந்தம் வேண்டாமென உதறிவிட்டாய்.

அழகான வீடு கட்டி அழகு பார்த்தேன்

அந்த வீட்டிற்குள் சிரிப்பு கேட்க ஆசைப்பட்டேன்

மண வாழ்வு வாழ மணமுடித்து வைத்தேன்

கடைசி வரை உன்கூட இருக்க கனவு கண்டேன்

அழகு பார்த்த வீட்டிற்குள் வாழ எனக்கு

அனுமதி கொடுக்கவில்லை உன் மனது

ஆசை முடியுமுன்னே ஒதுக்கி வைத்தாய்

மன நோயாளியாக என்னை பிரித்து வைத்தாய்

முதியோர் இல்லத்தை தேடிச் சென்றாய்

இது தான் உன் இல்லம் என்று ஒதுக்கி விட்டாய்

தனிமையில் வாடுகிறது என் மனது

இனிமையை காண துடிக்கிறது என்

''இதயம் என் ஆசி உன்னோடு என்றென்னும்''

R.சுந்தர பாய்

Resource Centre

**நீதி நூல்களின் வரிகள்**

| | | |
|---|---|---|
| ஒரு வரியில் கருத்துக்கள் சொல்வது | - | ஆத்திச்சூடி |
| இரண்டு வரியில் கருத்துக்கள் சொல்வது | - | திருக்குறள் |
| மூன்று வரியில் கருத்துக்கள் சொல்வது | - | திரிகடுகம் |
| நான்கு வரியில் கருத்துக்கள் சொல்வது | - | நான்மணிக்கடிகை |
| ஐந்து வரியில் கருத்துக்கள் சொல்வது | - | சிறு பஞ்சமூலம் |
| ஆறு வரியில் கருத்துக்கள் சொல்வது | - | ஏலாதி |

விஷ்ணு

9-ஆம் வகுப்பு

# Salem Meet 2018









# அன்னையின் அன்பு

சாப்பிட வாப்பா...
என்ற அரை மணி நேர
கெஞ்சலுக்குப் பின்
இருக்கும் இடம் தேடி
சாப்பாடு கொண்டு வரும்
அன்னையின் அன்பு

நூறு அடி தூரம் உள்ள
ஓட்டலுக்கு நடந்து சென்ற
போது தான் புரிந்தது...
இழந்தவன் தேடுவதும்
இருப்பவன் தொலைப்பதும்
அன்னையின் அன்பு...

நாம் புறக்கணிக்கப்படும்
போது தான் புரிகிறது
நாம் புறக்கணித்தவரின்
வலியும் வேதனையும்
நாம் புரிந்து கொள்வது தான்
அன்னையின் அன்பு......

T. அனுஷா ராணி
நாகர்கோவில்

## பசி

பள்ளியில் பெறுவது - கல்வி
கற்றலின் வெளிப்பாடு - அறிவு
அறிவின் ஆரம்பம் - வெற்றி
உன்னை வெற்றியடைய வைப்பது -திறமை
உயர்ந்த நிலைக்கு உன்னை
கொண்டு செல்வது - உழைப்பு
சாதனைகள் பல செய்திடு!
வாழ்வில் உயர்ந்திடு

ஜெப பிரியா
9-ஆம் வகுப்பு
புனித மரியன்னை உயர் நிலைப்பள்ளி

## அம்மா!

எல்லா குற்றங்களையும் மன்னிக்கும்
ஒரே நீதி மன்றம்
தாயின் இதயம் மட்டுமே
உலகில் தேடித் தேடி அலைந்தாலும்
நாம் மீண்டும் அமர முடியாத
சிம்மாசனம் நம் **தாயின் கருவறை**.......
ஒரு தாயின் அன்பு
அவள் குழந்தைக்கு தரும்
**ஒரு முத்தத்திலேயே தெரியும்** ......

பா. அருணாச்சலம்
9-ஆம் வகுப்பு
அ. உ. நி. பள்ளி குஞ்சாண்டியூர் நங்கவள்ளி, ஒருங்கிணைப்பாளர் : மூர்த்தி

## விவசாயத்தை மறந்தான்!.....

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு பெண் குழந்தை. அப்பொழுது அவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. அவருக்கு ஒரு ஏக்கர் நிலம் இருந்தது. அவர் மனைவிக்கு வைத்தியம் செய்வதற்கு பணம் இல்லை. அப்போது ஒரு வட்டிகாரரிடம் ரூ.10000 கடன் வாங்கினார். ஒரு மாதத்திற்கு பிறகு அந்த வட்டிக்காரர் ரூ.10000 தருமாறும் தரவில்லை உன் நிலம் உனக்கு இல்லை என்றும் கூறினார். 'உனக்கு ஒரு வாரம் கால அவகாசம்' என்றும் கூறினார்.

அப்பொழுது அந்த விவசாயிக்கு ஒரே வழி தான். விவசாயம் செய்து தான் கடனை தர முடியம். விவசாயம் செய்ய நீர் இல்லை என்ன செய்வது என விவசாயி புலம்பினார். அப்போது அந்த விவசாயியின் மகள் அப்பா நமது நிலத்தில் நிலத்தடி நீர் இருக்கும் நாம் அடிக்குழாய் நீர் எடுத்துக் கொள்ளலாம். அடிக்குழாய் (போர்) போட பணத்தை தயார் செய்து விட்டார். அடிக்கடி அந்த வட்டிக்காரர் வந்து மிரட்டி பணத்தை கேட்டார். (இரண்டு மாதங்களுக்கு பிறகு) விவசாயி நல்ல விளைச்சல் பெற்றார். அறுவடை காலம் முடிந்தது. அறுவடை செய்தார். அப்ப வந்த வட்டிக்காரருக்கு உடல்நிலை சரியில்லை. அறுவடை முடிந்த அடுத்த நாள் விவசாயிடம் கையேந்தி நின்றார். அந்த விவசாயி அறுவடை செய்த பயிர்களை அந்த வட்டிக்காரருக்கு கொடுத்து விட்டார் **விவசாயி !.....மழை வெயில் பாராது**

**தன் மனம் சோராது உழைத்த அவனுக்கு** வறுமையே விதி......

பெயர் : பா.கோகிலாஸ்ரீ

வகுப்பு: 8

பள்ளி : அ.ம.மே.நி.பள்ளி

# நாளைய விடியல் நமக்காக

தன் வாழ்வெல்லாம் ஓய்வின்றி
உழுவதால் தான் ஊரார் உணவுக்காக
உதிரம் உதிர உழைத்தால் தான்



ஊர் நலத்திற்காக
பகல் இரவு பாராமல் பம்பரமாய்
சுழன்றான் நம் உலகம் சுழலா
மண்ணையே பொன்னாக்கினான்
உயிர் கொடுத்து விதையை கதிராக்கினான்
ஆற்றிலேர நீர் எடுத்து பயிர் தலைக்கு வைத்தான்
சேற்றிலே கால் வைத்து நித்தம் சோறு தந்தான்
பக்குவமாய் விதையிட்டு வயலைச் சுற்றி
பாத்தி கட்டி முளை செழிக்க உறமிட்டு
புது உயிராய் பயிர் துளி விட்டு தை மாதம் முதல் நாளில்
பயிர் அறுவடை உயிர்களின்
பசிக்கு இவன் உழைப்பே விலை

ஆதரவு தருபவர்களிடம் அதிகாரம் “இல்லை” ?

அதிகாரம் இருப்பவர்களோ ஆதரவு தருவதில்லை”!

மழை வெயில் பாராது

தன் மனசேராது உழைத்த அவனுக்கு

வறுமையே விதி ஆனது!

நாட்டில் மழை இல்லை நலமான உரம் இல்லை

இருப்பினும் உழைக்கும் ஊனக்கோர் ஈடு இல்லை!

பச்சை மட்டும் பரவிய வயலில்
பல வண்ணக்கொடி பறக்கிறது வறுமையில்
பேரடிப்பட்டு சதுரடிக்கு விலைப் பேசுகிறாய்

ஜி. பூவரசி ஒருங்கிணைப்பாளர் மூர்த்தி ஊர் : நங்கவள்ளி

## <u>அம்மா கவிதை</u>

அம்மாவுக்கு என்று தனியாக கவிதை வேண்டாம் அன்பாக பழகிப்பார் அம்மாவே கவிதை தான்.
உலகில் தேடி தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் தாயின் மடி
ஆயிரம் முறை காயப்பட்டாலும் தன்னை ஒரு முறைக் கூட காயப்படுத்தாத உறவு அம்மா
தமிழில் அம்மா என்ற சொல் எப்படி வந்தது தெரியாது ஆனால் அன்பு என்ற சொல் நிச்சயம் அம்மாவில் இருந்து தான் வந்திருக்கும்.
நீ கனவில் கண்ட பெண்ணை விட உன்னை கருவில் சுமந்த தாயை நேசி.

சு. சுகந்தி
7-ஆம் வகுப்பு

## புன்னகையின் பெருமை

அமெரிக்காவிலிருந்து பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நான்கு பேராசிரியர்கள் அன்னை தெராசாவைக் காண வந்தார்கள். விடைபெறும் போது என்றும் நினைவில் வைக்கும் ஓர் அனுபவ மொழி அருளுங்கள் என்றனர். அதற்கு அன்னை தெரசா ‘ஒருவரையொருவர் கண்டதும் புன்முறுவல் புரியுங்கள்’ என்றார். ‘சிரிக்க மட்டும் எனக்குத் தெரியாமல் போயிருந்தால் வேலைப் பளுவில் எப்போதோ இறந்து போயிருப்பேன்’என்றார் ஆபிரகாம் லிங்கன்.

‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்கிறது திருக்குறள்

‘எப்போதும் மகிழ்ந்திருங்கள்’ என்கிறது விவிலியம்

‘எதை இழந்தாய் நீ அழுவதற்கு?’ என்கிறது பகவத் கீதை

குழந்தைகள் அழகாக இருப்பதற்கான காரணம் அவர்களின் கள்ளமில்லாச் சிரிப்பு தானே‘வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்’ என்பது பழமொழி மட்டுமன்று இயல்பாய் வாழ்வதற்கான அற்புதமான கொடையும் ஆகும்.

எனவே, ஒரு முறை வாழும் இவ்வாழ்க்கையைப் புன்னகை என்னும் நகை அணிந்து அழகு செய்வோம். மாணவர்களுக்கு இதனைப் பழக்கி விடுவோம். உறவுகள் உறங்கி விடாமல் உருக்கொடுக்க புன்னகை புரிவோம். இதுவே மனிதர்களாக இருப்பதற்கான அழகின் இரகசியம்.


க. இராஜேஸ்வரி

M.A(His) B.Lit (Ta)., M.A (Yoga) B.Ed

ஒருங்கிணைப்பாளர்

மயிலாடுதுறை

73736 84441

## முன்னேற்றத்தின் தடைக்கல் !

முன்னேற்றத்தின் தடைக்கல்லே !

சோம்பலடா ! அதை

முழுவதுமாய்த் துறந்திடல் வேண்டுமடா !

முன்னேற்றப் பாதையில்

முள் முளைக்கும் அதை

முயற்சி செய்து அகற்றினாலே நல்வினை தான்!

முன்னேற்ற முதல் எதிரி

'நான்' அகந்தை – அதை

முழுமையுடன் போக்கினாலே !

நன்மை வரும்.

முன்னேற்றப் பாதையிலே 'நான்' இருந்தால்

முள்ளாக மாறிடுமே வாழ்க்கையும் தான்

முன்னேற்றம் வேண்டும் என்றால்

முகம் மலர்வோம்

முறைப்படியே திட்டமிட்டுச்

செயல்படுவோம்

முரணான வார்த்தைகளை முறைப்படுத்தி

முனைப்பாக முயற்சி தனை முழுமை செய்வோம் !

என்னாளும் 'நான்' போக்கி வாழ்ந்திடுவோம்

என்னாளும் பொன்னாளாய் பூர்த்தி செய்வோம் !

என் நாடே 'நான்' அதனை வீழ்த்தி விடு

பொன்னேட்டில் உன் புதுக்கவிதை இயற்றிவிடு !


க. இராஜேஸ்வரி

M.A(His) B.Lit (Ta)., M.A (Yoga) B.Ed

ஒருங்கிணைப்பாளர்

மயிலாடுதுறை

73736 84441

# விதியை வெல்வோம்

விதிப்படி தான் எல்லாம் நடக்கும் என்ற நம்பிக்கை நம் மக்களிடம் அதிகம் உண்டு... விதி என்ன அவ்வளவு வலிமையானதா? அதை வெல்லவே முடியாதா? என்று கேட்டால் விதியை நிச்சயம் வெல்ல முடியும். விதியின் வலிமை மிகப்பெரியது என்று சொன்ன வள்ளுவர் கூட மிகச்சரியான முயற்சியால் அவ்விதியையும் வெல்ல முடியும் என்று கூறியிருக்கிறார்.

அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் முதல் நமது குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர். அப்துல் கலாம் வரை தங்களின் ஆக்க பூர்வமான முயற்சிகளால் விதியை வென்று சாதனை படைத்தவர்கள் தாம்.

- எரிக்ஹேஹன் மாயர் என்ற பார்வையற்றவர் தம் முயற்சியால் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து மிகப்பெரும் சாதனை நிகழ்த்தினார்.
- திக்குவாயாகவும் ஊனமாகவும் பிறந்த பல்கிவாலா விதியை நோகாமல் முயன்று சட்ட மேதையாக விளங்கினார்.
- சப்பைக் கால்களுடன் பிறந்த சார்லி சாப்ளின் தன் விதியை நொந்து வீட்டில் இல்லாமல், விதியை சாதகமாக, பலராலும் கேலியாகப் பேசப்பட்ட தன்னுடைய நடையினாலேயே உலகின் மிகச் சிறந்த நடிகராகப் புகழ் பெற்றார்.

ஆறறிவுக்குக் குறைந்த உயிர்கள் கூட இயற்கை விதியை எதிர்த்துப் போராடி வாழ முயல்கின்றன.

படைப்பின் சிகரமாகிய மனிதன் மிக உயர்ந்த சிந்தனை ஆற்றலை பெற்றவன். இன்றைக்கு மனிதப்படியாக்கம் (குளோனிங்) என்ற மனிதனையே படைக்கும் மகத்தான சக்தியைப் பெற்று விட்டான்.

இருட்டிலும் ஒளி இருக்கும். விதியிலும் வழி கிடைக்கும். ஆம் விண்மீன்கள் இருட்டில் வழி காட்டும். விடா முயற்சி விதியினை வெல்ல வழி காட்டும். இனி நாம் விதியைச் சவாலாக ஏற்றுச் சாதனை புரியச் சபதமேற்போம்.


க. இராஜேஸ்வரி

M.A(His) B.Lit (Ta)., M.A (Yoga) B.Ed

ஒருங்கிணைப்பாளர்

மயிலாடுதுறை

73736 84441

## கலைச் சொல் விளக்கம்

நான்காவது எஸ்டேட் :செய்தி தாட்கள் நான்காவது எஸ்டேட் என அழைக்கப்படுகிறது.

பசுமை புரட்சி :விவசாயத்தில் நவீன எந்திரங்கள் மற்றும் புதிய முறைகளைப் பயன்படுத்தி நாட்டின் உணவு உற்பத்தியை பெருக்குவதை பசுமைப் புரட்சி எனலாம்

கெரோ :தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி நிர்வாகத்தினரை சுற்றி வளைத்துப் போராட்டம் நடத்துவது.

வறுமைக்கோடு :வருமானத்திற்கும், தேவைக்கும் இடையிலான கோடு


க. இராஜேஸ்வரி

M.A(His) B.Lit (Ta)., M.A (Yoga) B.Ed

ஒருங்கிணைப்பாளர்

மயிலாடுதுறை

73736 84441


## எதைப்பற்றியது?

| | | |
|---|---|---|
| பேடாலஜி | : | மான் அறிவியல் குறித்த படிப்பு |
| பெட்ராலஜி | : | பூமியில் பாறை உருவான விதம் குறித்த படிப்பு |
| சிஸ்மோலாஜி | : | பூமி அதிர்வு குறித்து படிக்கும் படிப்பு |
| ஹைட்ராலஜி | : | பூமியில் தண்ணீர் இருக்கும் அளவு குறித்து படிக்கும் படிப்பு |
| கிளைமட்டாலஜி | : | சுற்றுப்புறத்தில் நிலவும் பருவநிலை மாறுபாடு குறித்து படிக்கும் படிப்பு |

உங்களுக்கு தெரிந்திருக்குமே... !

1. Alphabet என்ற சொல் எந்த மொழியிலிருந்து வந்தது?

   கிரேக்கம் alpha, beta

2. பிலிப்பைன்ஸ் எத்தனைத் தீவுகளைக் கொண்டது?

   7107

3. வாழுகின்ற சராசரி மனிதனின் சிறுகுடலின் நீளம் யாது?

   3 மீட்டர். இறந்தபின் அது 8 மீட்டர் அளவிற்கு நீட்டப்படலாம்.

சித்ரா
ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை
75027 54292

## சிந்திக்க சில......

நொருங்க தின்னால் நூறு வயது -அள்ளி அமுக்கினால் அற்ப ஆயுசு

காலை வெய்யில் பாலுக்கு சமம் - மாலை வெய்யில் மருந்துக்கு சமம்

உண்ணா நோன்பு உயர்ந்த மருந்து -பிராண சக்தியே பெரிய மருந்து

தாயை பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே

உப்பில்லா (தாது உப்பு) பண்டம் குப்பையிலே

உழைக்காத உடலும், உடற்பயிற்சி இல்லாத உடலும் உளுத்துப்போகும்

சுகாதாரத்திற்கு ஆதாரம் நல்ல நீர்நில நீர் உயர குடிநீர் தரம் உயரும்

ஆரோக்கிய வாழ்விற்கு – ஐந்து வழிகள்

1. காலை மாலை மூச்சுப் பயிற்சி
2. சந்தி நேரத்தில் உடற்பயிற்சி
3. தினம் இருவேளை உணவு
4. தினம் எட்டு டம்ளர் தரமான நீர்
5. வாரம் ஒரு நாள் உபவாசம்

அ. விஜயலஷ்மி அசோக்குமார்

## வீரவணக்கம்



தன் வீடு

தன் குடும்பம்

தன் பிள்ளையென

தன்னுள்ளே

தானிருக்கும்

தரணியிலே-

இன்னுயிர் தந்து

இத்தேசம் காக்கும்

இவரெல்லாம்

இமயமன்றோ...

மண்ணுயிர் காத்திடும்

மறவரவரை

கண்ணென்

போற்றுவோம்
விண்ணுயர
அவர் புகழை
பாடுவோம்
நாட்டு மக்கள்
நினைவில்
இரண்டொரு
நாளில் இதும் மறந்திடும்
பழைய செய்தியென,
பத்திரிகையும்
இதை கடந்திடும்
ஆயினும் அவர்
குடும்பம் எப்படி
வெந்திடும் ......
மண்ணுயிரே பெரிது

எண்ணுயிர்
துச்சமென எல்லையில்
இன்னுயிர் நீத்த
மேன்மை மிகு

மாந்தவர் குடும்பத்தார்
இறைவன் அருளோடு
இமயமென
வாழ்ந்திட
இருகரம் கூப்பி வணங்கிடுவோம்.

லட்சுமி
9-ஆம் வகுப்பு

**தாய்**

மௌனமாய் பேசினேன்!

காணாமல் ரசித்தேன்!

காற்றில்லாமல் சுவாசித்தேன்!

நாவில்லாமல் சுவைத்தேன்!

உணர்வில்லாமல் உணர்ந்திருந்தேன்!

தாயே உன் கருவில் இருக்கும் வரையில்

**வாழ்க்கை**

வாடாத மலர்களும் உள்ளதா உலகில்!

தேயாத வெண்ணிலாவும் உள்ளதா உலகில்!

வற்றாத குளமும் உள்ளதா உலகில்!

வருந்தாத மக்களும் உள்ளனரா உலகில்!

**நம் முன்னேற்றம்**

ஆடிப்பபட்டம் தேடி விதை ! என்ற காலம் போய்

ஆடி மாதம் தேடி ஆஃபர்! என்ற காலம் வந்துள்ளது.

இது தான் நம் நாட்டின் முன்னேற்றம்.

**ஆறுகள்**

ஆறுகள் இப்போதெல்லாம் கண் தானம் கொடுக்கின்றன

தெரியுமா ? அதன் அடையாளம் தான் மணல்

கொள்ளைப் பள்ளங்கள்!

**நாம் எப்படிபட்டவர்கள் தெரியுமா?**

மரங்களை மொட்டையாக்கி,

மழைக்கு வேண்டுதல் வைத்தோம்!

ஓசோனுக்கு காதுகுத்தி,

வாயு தேவனுக்கு விழா நடத்தினோம்!

கழிவுகளை கங்கையில் இட்டு

கருமம் நீங்க அதிலேயே குளித்தோம்.

காடுகளை கட்டடம் ஆக்கி,

பால்கனியில் பூந்தொட்டி வைத்தோம்

இப்போது

சுற்றுச் சூழல் மாசடைந்ததென்று கூறி

மாசுக்கட்டுக்பாட்டு வாரியம் அமைக்கின்றோம்.

**வெற்றி**

வானில் வெண்ணிலா ஊர்வலம் வருவது போல்

நீ அனைவரின் எண்ணங்களிலும் சிறந்தவன்

என ஊர்வலம் வர வேண்டும். அது தான்

உன்னுடைய மிகப்பெரிய வெற்றி!

இப்படிக்கு

பணிவுடன்

செல்வி

பாசம் கொண்டால் பிரிவு

இல்லை

கோபம் கொண்டால் உறவு

இல்லை

பேராசை கொண்டால்

நிம்மதி இல்லை

விழிகள் இல்லையெனில்

பார்வை இல்லை

வலிகள் இல்லையெனில்

வாழ்க்கை இல்லை

முயற்சி இல்லையெனில்

வெற்றி இல்லை

முயன்ற மனிதர் தோற்றது

இல்லை

கடை பிடித்தால் நம் வாழ்வில் வெற்றி பெறலாம்.

ஒருங்கிணைப்பாளர் : க. மூர்த்தி
மாணவன் பெயர் : சாய் கிருஷ்ணன். எம்
வகுப்பு : 7-ம்
பள்ளி : அரசு நடுநிலைப்பள்ளி
நங்கவள்ளி

## தாயின் அன்பு

இறைவன் படைத்த அன்பான
உயிருக்கு அவன் வைத்த
அன்பான, எளிமையான பெயர்.........
**அம்மா**
கடலை நேசித்தேன்
கடக்க முடியவில்லை!

விண்ணை நேசித்தேன்
தாண்ட முடியவில்லை!
காற்றை நேசித்தேன்
பிடிக்க முடியவில்லை!
என்னை ஈன்றெடுத்த

**தாயை** நேசித்தேன்
மறக்க முடியவில்லை!

அன்பு அக்கறை
அரவணைப்பு பாசம்
நேசம் தியாகம் என
இவை அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற
முடிந்தால் அது நம்
தாயிடம் மட்டுமே
பெற முடியும்.!......

ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்

அன்னையே உன்னைப் போன்று
அன்பு காட்ட இந்த

உலகில் யாரும் இல்லை!....
மூச்சடக்கி ஈன்றாய்
என்னை............
என் உயிற் மூச்சு உள்ள வரை
உன்னைக் காப்பேன்
**அம்மா!**
எல்லா குற்றங்களையும் மன்னிக்கும்
ஒரே நீதி மன்றம்
தாயின் இதயம் மட்டுமே......
உலகில் தேடித் தேடி அலைந்தாலும்
நாம் மீண்டும் அமர முடியாத
சிம்மாசனம் நம் **தாயின் கருவறை**.......
ஒரு தாயின் அன்பு
அவள் குழந்தைக்கு தரும்
**ஒரு முத்தத்திலேயே தெரியும்** ......

பா. அருணாச்சலம்
9-ஆம் வகுப்பு
அ. உ. நி. பள்ளி குஞ்சாண்டியூர் நங்கவள்ளி, ஒருங்கிணைப்பாளர் : மூர்த்தி

## ***துன்பமே கேட்டுக் கொள்***

துன்பமே கேட்டுக் கொள்
வலிகளை பொறுத்து கொள்வேன்
பொறுமையின் சிகரம் நுனி வரை
துன்பமே கேட்டுக் கொள்
புற முதுகு காட்டி ஓட மாட்டேன்
நீ புலம்பி விழும் வரை
துன்பமே உன்னை காத்துக் கொள்
என் வெற்றியின் மழையில்
துவண்டு விழாமல் உன்னை
காத்துக் கொள்
துன்பமே நீ புயலாகி வீசினாலும்
இன்று நான் நாவால் தான்
வளைந்து கொடுத்து போவேன்
ஒரு நாள் மரம் ஆவேன்
அன்று என் தென்றலும்
உன்னை விரட்டி விடும்
தென்றலே இரவு மட்டுமே மழைத்திரு
மறுநாள் சூரியன் உதித்திடும்
என் வெற்றியின் வாசற்படியில் ....... நீ நில் துன்பமே

சேலம் மாவட்டம்
ஒருங்கிணைப்பாளர் ந. மூர்த்தி
அரசு மேல்நிலைப்பள்ளி
சேலம் மாவட்டம்

**நட்பு**

உதிரும் பூக்களுக்கு கூட ஒரு நாள்
மரணம்
பிரியும் நட்பிற்கு ஒவ்வொரு நாளும்
மரணம்
தூரத்தில் இருப்பது இமய மலை
நம் மனத்தில் இருப்பது
நட்பு மலை.........
கடலில் இருப்பது
உப்பு
எனக்கு இருப்பது
நட்பு
பிரிவோ கோபமே ஒருவரை பிரிவதற்கு
அல்ல
அவர்களை அதிகமாக நினைப்பதற்கே......
உன் உயிரும் என் உயிரும் நட்பு உயிர்......
மரத்தில் இருப்பது வெள்ளை புறா
நம் மனதில் இருப்பது
நட்பு புறா
விட்டு கொடுப்பது மட்டும் நட்பல்ல

க. ஹரிணி தர்ஷினி
6-ஆம் வகுப்பு
ஊ. ஒ. ந. நி பள்ளி
நங்கவள்ளி

# உழவன்

ஏர் ஓட்டின வயலினிலே
கார் ஓட்டும் காலமடா.........
நஞ்சை காட்டின் நெஞ்சினிலே
நஞ்சு விதைக்கும் காலமடா.........

சோறு போட்ட காலத்தில் உழவன்
இன்று அவன் பெயர் கிழவன்
குளிரிலும் இவனுக்கில்லை போர்வை
நிலம் முழுவதும் இவனது வேர்வை......

இன்றில்லை இவனுக்கு மதிப்பு
அரசுக்கும் புரியவில்லை இவன் கொதிப்பு.........
ஒரு நாள் நிச்சயம் பசிக்கும்
அன்று இவன் பணி ருசிக்கும் ............

உனக்கும் எனக்கும் ஓய்வுண்டு
எல்லா பணிக்கும் ஓய்வுண்டு
கிழவன் ஆன போதிலும்
உழவன் பணிக்கு ஓய்வில்லையோ.........

விவசாயம் அழிந்துவிட்டால்
உண்ண கூட வழி இல்லை –அதே
விவசாயம் அழிந்து விட்டால்
வருந்தி கூட பயனில்லை............

வெயிலால் கருத்த தோல்
நலிந்த உடல்
காய்ந்த வயிறு என்றாலும்
மருத நிலத்தின் மாமன்னர்கள்
தான் நம் உழவர்கள்!

தி. வெங்கட்
சிறுமலர் மேல்நிலைப்பள்ளி
4-ரோடு, சேலம்-7


## முப்பெரும் தலைவர்கள்

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும் — தந்தை பெரியார்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்

நிகரென்று கொட்டும் முரசே எழும்
நீணிலம் வாழ்பவ ரெல்லாம் — அண்ணல் அம்பேத்கார்
தகரென்று கொட்டும் முரசே பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்

சாதி மதங்களை பாரோம் உயர்
சென்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்
வேதியர் ஆயினும் ஒன்றே அன்றி — மகாத்மா காந்தியடிகள்
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே
தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்





P.இந்திராணி
VII- "A"
நகரவை மகளிர் மேல் நிலைப்பள்ளி குகை
சேலம்

## வாசிப்பு

**முன்னுரை**

‘வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது’ எனும் கூற்று பாடசாலை முதல் உரையரங்குகள் வரை வாய்ப்பாடாக கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அவை இப்பொருளின் உள்ளார்ந்த ஆற்றலினையும் முக்கியத்துவத்தினையும் வெளிக் கொணரத் தவறி விடுகின்றன. அதன் வெளிப்பாடாகவே வாசிப்பு பற்றிய மேல் நோக்கமான பார்வை மலிந்து விட்டதனையும் சமுதாய முரண்பாடுகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் விலகி நிற்க முனைகின்ற அம்சமாகவே வாசிப்பு அமைந்துள்ளதை இந்த கட்டுரை மூலம் காணலாம்.

**வாசிப்பு ஏன் அவசியம் ?**

உலகில் தோற்றம் பெற்ற அனைத்துப் படைப்புகளிலும் மனிதனே மேலான பொருள். மனிதனின் ஆளுமை, கம்பீரம், மேன்மை குறித்து உலக இலக்கிய விற்பன்னர்களில் ஒருவரான மார்க்ஸீம் கோர்க்கி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

‘மனிதன் எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கின்றது, எனக்கு மனிதனை விட சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டும் தான் எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி. அற்புதம் செய்வோன் அவனே இவ்வுலகில் அற்புத அழகுப் பொருட்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை. நான் மனிதனுக்குத் தலை வணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை. மனிதனே எல்லாப் பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் படைப்பாளி’

**எவற்றை வாசிக்க வேண்டும்?**

‘வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது’ வாசிக்கின்ற அனைவரும் பூரண மனிதர்களா? புத்தகங்கள் அனைத்தும் மனித ஆற்றலை வெளிப்படுத்துகின்றனவா? போன்ற வினாக்கள் எழுகின்றன. மனித நேயத்தின் ஆணி வேர்களைத் தின்று தீர்த்து விட்டு மனிதனின் ஆற்றலைக்களை பண்புகளை எந்தெந்த வகையில் சிதைக்க முடியுமோ அந்தந்த வகையில் சிதைக்கின்ற நசிவு

இலக்கியங்களும் நம் மத்தியில் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன.

'நெல்லுக்குள் அரிசி' என்ற உதாரணத்திற்கு வருவோம் அரிசி இல்லாத நெல்லை பதர்கள் எனக் குறிப்படுவோம். இவ்வாறு தான் மனிதத் தன்மை இல்லாத புத்தகங்களும் காணப்படுகின்றன. அவற்றினை இனங்கண்டு நீக்குவதற்கும் வாசிப்புடன் கூடிய விஞ்ஞான பூர்வமான பார்வை அவசியமானதொன்றாகிறது.

**எவ்வாறு வாசிக்க வேண்டும்?**

வாசிப்பினை மேல் நோக்காக, தகுந்த அடிப்படையற்ற நிலையில் மேற் கொண்டு மனம் போன போக்கில் பொருள் கொள்வதனால் எவ்வித பயனும் இல்லை. சில சமயங்களில் இதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை விட தீமைகள் அதிகம். எனவே வாசிப்புத் தொடர்பான செயற்பாட்டில் ஆழ்ந்து கற்றல், கிரகித்துக் கற்றல், குறிப்பெடுத்தல் போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்வாறு புத்தகங்களை நுனிப்புல் மேய்ந்த நிலையில் வாசிப்பதனால் எந்தப் பயனும் பெற முடியாது. ஆழ்ந்து வாசித்தல், வாசித்தவற்றின் மையக்கருத்தினைக் கிரகித்து குறிப்பெடுத்தல். அதனைச் சமுதாயத்துடன் இணைத்துப் பார்த்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக ஒரு புதிய சிந்தனையை நோக்கி நகரவும். வாழ்வினை இன்றைய நிலையை விட முன்னேற்றகரமான நிலைக்கு எடுத்துச் செல்லவும் கூடியதாக அமையும்.

**வாசிப்தற்கு நேரம் உண்டா?**

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மனிதனின் வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவே வாசிப்பதற்கான அவகாசம் இல்லை என நம்மில் பலர் முறையீட்டுக் கொள்கின்றனர்.

பாரதியின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிக் கூற வேண்டிய அவசியமேயில்லை. துன்பியலில் உழன்றும் ஏறாய் நின்ற பாரதி தன் வாழ்வில் எத்தனையோ அவலங்களைச் சந்தித்துள்ளான்.

இந்நிலையில் வாசிப்பதற்கு நேரமில்லை என்ற முறையீடு எந்தளவு நியமானது? இன்றைய இயந்திர உலகில் மனிதனின் வேளைப்பளு, வாழ்க்கைப் பிரச்சனை என்பவை அதிகரித்துள்ளன என்பது உண்மைதான். ஆனால் வாசிப்பதற்கு நேரம் இல்லை எனக் கூறும் அளவிற்கு நாம் இயந்திரங்களோடு இயந்திரமாகி விடவில்லை.

**முடிவுரை:-**

‘வாசிப்பு’ ‘தேடல்’ எனும் விஷயங்களைக் கல்வி நாகரிகப் போக்காகக் கொண்டு சிற்சில விஷயங்களைக் கற்றுத் தலைவீங்கித் திரிகின்ற உளநோயாளராக அல்லாமல், மாறிவரும் சமுதாயச் சூழலைப் புரிந்து கொள்ளவும் நாகரீகமான வாழ்க்கையைச் சிருஷ்டிக்கவும் முனைகின்ற போது தான் அவை அர்த்தமுள்ளதாகின்றன.

**அறுசுவையும் நட்பும் பகையும் பயனும்**

| சுவை | பயன் | நட்பு | பகை |
|---|---|---|---|
| துவர்ப்பு | ரத்தவிருத்தி | உப்பு | புளிப்பு,கசப்பு,காரம் |
| உப்பு | எலும்பு வளர்ச்சி | இனிப்பு | புளிப்பு,கசப்பு,காரம், துவர்ப்பு |
| இனிப்பு | தசை வளர்ச்சி | உப்பு புளிப்பு | கசப்பு,காரம் |
| புளிப்பு | கொழுப்பு பராமரிப்பு | இனிப்பு | கசப்பு,காரம்,துவர்ப்பு,உப்பு |
| கசப்பு | நரம்பு சக்தி | காரம் | இனிப்பு,புளிப்பு,துவர்ப்பு,உப்பு |
| காரம் | வீரிய விருத்தி | - | இனிப்பு,புளிப்பு,துவர்ப்பு,உப்பு,கசப்பு |

மனித உடலில் மூன்று நாடி

கிழமை நாடி மனித உடல்

சனி, புதன், வாதம் உடல் சமநிலை பெற ஆயில் பாத் எடு

ஞாயிறு, செவ்வாய் பித்தம் வெப்பம் அதிகமாகும் குளிர்ச்சி உணவு உண்ண வேண்டும்.

திங்கள், வியாழன், வெள்ளி – சிலேத்துமம் -குளிர்பானம் கூடாது

அமாவாசையில் நீர் சத்து குறைவு, பௌர்ணமியில் நீர் சத்து அதிகம்.

பழ உணவே நல்ல மருந்து

கிரஹண காலங்கில் உடலில் நச்சுத்தன்மை கூடும் ஏதும் சாப்பிடலாகாது. இறைவழிபாடு செய்ய சக்தி கூடும்.

“ஆற்று நீர் வாதம் போக்கும்

அருவி நீர் பித்தம் போக்கும்’

சோற்று நீர் இரண்டையும் போக்கும்.

சு. கணேசன்
ஒருங்கிணைப்பாளர்
9942793478

## P.N.N. Foods

Positive Foods : சாறு மற்றும சக்கை நிறைந்த பழங்கள், நிலத்திற்கு மேலே காய்ப்பவை, கீரைகள், கொடிக் காய்கள்

Netural foods : தானியங்கள், பருப்பு வகைகள்

Negative Foods : பால்,பால் பொருள்கள் எண்ணெய் வித்துக்கள், ஜீனி ரீபைனண்ட்ஆயில்,உப்பு,பதப்படுத்திய உணவுகள் ஊறுகாய்

இயற்கை உணவுகளை சமைக்காமல் சாப்பிடுவதே ஆரோக்கியம்.அரிசி மட்டுமே உணவு என எண்ணாதீர்கள். உண்ணுவது யாவும் உணவுகளே. முளை கட்டிய உணவுகள் முதன்மையானது.

உன் உணவை கவனி - அது உணவுகளாகின்றது.
உன் உணர்வை கவனி - அதுவே எண்ணமாகின்றது
உன் எண்ணத்தைகவனி - அதுவே சொல்லாகின்றது
உன் சொல்லை கவனி - அதுவே செயலாகின்றது.
உன் செயலை கவனி - அதுவே பழக்கமாகின்றது.
உன் பழக்கத்தை கவனி - அதுவே நடத்தையாகின்றது.
உன் நடத்தையை கவனி - அதுவே நீயாகின்றாய்!

க. ஜெயந்தி

## <u>மரத்தின் பயன்கள்</u>

மழை தருகிறது. நிழல் தருகிறது. எண்ணெய் தருகிறது. காய்கள் தருகிறது. பறவைகளுக்கு தங்குமிடம் குளிர்ச்சி தருகிறது. காற்று சுத்தம் செய்கிறது. சிறு

விலங்குகள் தங்குமிடம் மண் அரிப்பு தடுக்கிறது. வீடுகட்ட மரம் பூக்கள் தருகிறது. கடல் அலை வேகத் தடுப்பு, தழை உரம், பூமி வெப்பமடைவது தடுக்கப்படுகிறது. ஒலி மாசு குறைப்பு, ஆடுகளுக்கு தழை உணவு, மனிதர்களுக்கு வேலை வாய்ப்பு, பழங்கள் தருகிறது. வெள்ளத்தடுப்பு, பிறபல உபயோகங்கள் நிலத்தடி நீர் சேமிப்பு மருத்துவ பயன்கள், காகிதம் தயாரிக்க, மருந்து தயாரிக்க, தூசு குறைப்பு.

அது மட்டுமா, ஒரு அம்பது ஆண்டு வளர்ந்த மரம் பல இலட்ச ரூபாய்க்கு சமமான நன்மையை தருகிறது.

1. 5.30 இலட்சம் மதிப்புள்ள பிராணவாயுவை ஒரு ஆண்டில் வெளியிடுகிறது.
2. 10.30 இலட்சம் மதிப்புள்ள காற்று மாசுபாட்டை தடுக்கிறது.
3. 6.40 இலட்சம் மதிப்புள்ள மண் அரிப்பை தடுக்கிறது.
4. 10.00 இலட்சம் மதிப்புள்ள உணவை தருகிறது. இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு பலனைத் தருகிறது.

1. மாமரம் : காற்றை சுத்தம் செய்யம் குளோரினை வெளியிடுகிறது.
2. புளியமரம் : ஒலி மாசை கட்டுப்படுத்துகிறது.
3. விசிறிப்பனை : புளோரைடை வெளிப்படுத்துகிறது.
4. விலாமரம்: சல்பர் ஆக்ஸைடை வெளிப்படுத்துகிறது.
5. வேம்பு, புங்கன் : நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கி ஆரோக்கிய வாழ்வு கொடுக்கிறது

அ. திரிபுரசுந்தரி
ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை
கைபேசி: 9050729752

**முன்னோர் அருளுரை**

என் இனிய குழந்தாய் ! வசதியில்லையே எனக் கூறாதே நீ இருக்குமிடத்தையே வசதியாக்கிக் கொள். சகலமும் உன் வசமானால் தான் மனம் அலைவது குறையும். கடன் பெறாமல் தராமல் வாழக் கற்றுக்கொள். பொருளைப் போலவே அருளிலும் நம்பிக்கை வை. முன்னோர் முயற்சிகளின் பலனையே நாம் நுகர்கின்றோம். விஞ்ஞானம் மெய்ஞானம் அனைத்தும் முயன்று பெற்றதே. உடலுக்கு

உணவு எப்படி அவசியமோ அது போல மனதிற்கு நல் அறிவும் அவசியம் தேவை. அருளாலும் பொருளாலும் உன் வாழ்வை வளமாக்கி வாழ்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

வேம்பு
ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை
90256 67347

## தேசத்தின் உயிர் காத்த வீரர்கள்

**முன்னுரை :**

நவம்பர் 15 1962-ஆம் ஆண்டு இந்தோ-சீன போர் முடியும் தருணம். இந்திய ராணுவம் தொழிற்நுட்ப ரீதியாகவும் மனதளவிலும் தளர்ந்து இருந்த நேரம். இந்திய அரசு படைகளை திரும்ப அழைத்துக் கொண்டிருந்த சமயம். தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள். 'என் தேசம் எதிரி நாட்டிடம் கையேந்தி நிற்கிறதே' என்ற வருத்தத்தில் துடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜத்வத் சிங் மற்ற ராணுவ வீரர்களுக்கு மாறாக முடிவெடுத்தார்.

**வீரமகன் :**

ஜத்வத் சிங் ராவத் அருணாச்சல பிரதேசத்தில் சீன ராணுவத்தினரின் மீது தன் தாக்குதலை தொடர்ந்தார். அப்போது அவருக்கு 21 வயது. அன்றைய தேதியில் சீனா பல ரக துப்பாக்கிகளை வைத்திருந்தது. அப்போது இந்தியர்கள் இடம் இருந்தது வெறும் லைட் மிஷின் கன ரக துப்பாக்கிகள் மட்டும தான். சீனர்களிடம் இருக்கும் பலரக துப்பாக்கிகளை கைப்பற்றி தாக்குவது தான் திட்டம். ஜஸ்வந்த் இப்போது தனியாக இந்தோ சீனத்தின் எல்லைப் பகுதிகளை காக்கிறார். அப்போது அங்கு கடுங்குளிர். புன்னகையோடு நிதானமாக தன்னிடம் இருக்கும் குண்டுகளை குறி வைத்து சீனர்களை குறி வைக்கிறார். இப்படி இந்திய எல்லைகளை சரியான பின்புலம், உணவு, தூக்கம் இல்லாமல் 72 மணி நேரம் கடந்தார்.

**முடிவுரை :**

இத்தாக்குதலால் 300 சீன வீரர்கள் இறந்தனர். ஆத்திரம் கொண்ட சீனர்கள் ஜஸ்வந்த் சிங் தலையினை துண்டிக்கிறார்கள். அவரது வீரத்தை கௌரவிக்கும்

வகையில் அவர் காவல் காத்த இடத்தில் வெண்கல சிலையை நிறுவினர். சீனப் போர் முடிந்த பிறகு மகாவீர் சக்ரா விருதும், பதக்கமும் வழங்கி கௌரவித்து அவற்றைப் பற்றி எண்ணிப்பார்க்கையில் நினைவுக்கு வருவது ஒற்றை ஆளாக காத்தவர்.

**வ.பிரீத்தி - IX**

**அறிவியல் வளர்ச்சி**

கருக்குழாய்க் குழந்தை
லேசர் சிகிச்சை
மின் மயானம்
மருத்துவத்தின் அற்புதங்கள்
நாற்றுநட – பூச்சி
மருந்தடிக்க – கதிர்
அறுக்க – அரிசி
மூட்டை மூட்டிட
விவசாயத்தில் விந்தைகள்!
ஆக்கிட அறைந்திட
அவித்திட துறைத்திட
உலர்ந்திட
இல்லத்தில் அதிசயங்கள் !
விண்ணில் ஆளும் தேவர்
மண்ணில் வாழும் மாந்தர்
கணிணியில் விண்ணை
ஆளும் மகத்துவத்தை
என்னென்பேன்!
ஏதென்பேன்!

**குரு.V**

**No:5, Chinnavalayam,**
**Ariyalur District**
**ஒருங்கிணைப்பாளர்**
**ஜெயந்தி கணேசன்**
**9095777483**

**மரங்கள்**

அன்னை பூமியை

அநாதை இல்லங்களுக்கு

அனுப்பாது

அரவணைக்கும் - பூமியின்

புனிதப் புதல்வர்கள்

மரங்களே

தன்னை அறுப்பவர்

தம் இல்லக்

கதவாக இருந்து

காப்பது மரம் தான்!

இடுக்கண் புரியும்

மனிதர் தமக்கு

இன்னுயிர்க் காற்று தருவது

மரம் தான்!

மனிதனே நீ

மரமாவது எப்போது ?

வேண்டவே வேண்டாம்

மரங்களை வளர்த்திடு

மரங்களாவது

புனிதம் ஆகட்டும். !

குரு.V

No:5, Chinnavalayam,
Ariyalur District
ஒருங்கிணைப்பாளர்
ஜெயந்தி கணேசன்
9095777483

**<u>மனிதநேயம்</u>**

காலடி பட்டதும்

கண்ணது கலங்குவது போல

பிறர் ……….. கல்லடிப்பட்டதும்

கண்ணது கலங்கி

காலது ஓடி

கையது உதவுவது தான்

மனிதநேயம் !

பிறர் பசியால்

வாடும் முன் ஓடி –அவர்

வாட்டம் ஒட்டுவது

மனிதநேயம்!

வாடிய செடியின் வாட்டம்

ஓட்டும் தண்ணீர் போல்

கொடியது படர

கொம்பது நடுவது போல்

இல்லாத ஏழைகளுக்கு

இல்லறம் தருவதே

மனித நேயம்


குரு.V

No:5, Chinnavalayam,
Ariyalur District

ஓரங்கிணைப்பாளர்
ஜெயந்தி கணேசன்
9095777483

## பாடல்

அன்பினில் இன்பம் காண்போம்;
அறத்தினில் நேர்மை காண்போம்;
துன்புறும் உயிர்கள் கண்டால்;
துரிசறு கனிவு காண்போம்;
வான்புகழ் கொடையிற் காண்போம்;
வலிமையைப் போரில் காண்போம்;
தன்பிறப் புரிமை யாகத்
தமிழ்மொழி போற்றக் காண்போம்

அ. முத்தரையனார் மலேசியக் கவிதைகள்

## கல்வி

அக இருளை போக்கி,
அறியாமையை நீக்கி
காலத்தால் அழியாமல்
வறுமையை வேறருக்கும
கூர்மிகு ஆயுதமாம்
‘கல்வி’

## நட்பு

தோழனை தேர்ந்தெடு நன்றாய்
நட்புடன் வாழ்ந்திடு ஒன்றாய்
துன்பம் நேரிடும் வேலையிலே
துணையாய் நண்பன் நிற்பானே !
உள்ளக் குமுறல் காயங்களை
மெல்லத் தீர்க்கும் மருந்தாம்
நட்பு !!!

## விவசாயத்தை காப்போம்

மண் மனிதனின் முதல் தோழன்!
மண் மனிதனின் கடைசி எதிரி!
கருவை தாண்டிய பாதங்கள்
மண்ணின் முதுகு மிதித்து
புழுதி பிடித்து

உரண்டு பிரண்டு உறவாடுகின்றன!
கல்லறை நோக்கிய பயணங்கள்
மண்ணின் அறை திறந்து
நிரந்தர நித்திரையில்
கவனம் தொலைத்து துயில்கின்றன!

கடவுள் மண்ணின் முதல் விவசாயி !
மனிதன் கடவுள் படைத்த முதல் விவசாயி!
கடவுள் மண்ணின் கைதொட்டு
உயிரை உருவாக்கினார்!
மனிதன் மண்ணில் கைதொட்டு
பயிரை உருவாக்கினான்!

விவசாயி இறைவன் எனும்
முதலாளியின் முதல் ஊழியன்!
விவசாயம் மனிதன் எனும்
படைப்பாளியின் முதல் மொழியாம்!

விவசாயம் ஆதிமனிதனின் நீதித்தொழில்

மண்ணின் மைந்தனின் வியர்வைத் தொழில்!
விவசாயம் இறைவனால் எழுதப்பட்ட பணி !

இன்று விவசாயம்,
தற்கொலையின் திறவுகோல்!
பட்டினியின் படுக்கை!
துயரின் இருக்கை!
கண்ணீரின் அருவி!
பயிர்களின் வேர்களில் புதைபடுகின்றான் விவசாயி!
நீரற்ற பூமியில் வேரற்ற நிலங்களில்
சோரற்ற வயிறுடன் வதைபடுகிறான் விவசாயி!
வெடித்த வயலின் வறண்ட நாக்குகளில்
அவனது உயிரின் கடைசிச் சொட்டும்
உலரத் துவங்குகிறது.

நீர் வற்றிய ஆறுகளில் அவனது கனவில்
முதல் சுவடும் களவாடப்பட்டு விட்டது!
ஆறுகள் நீரைத் தொலைத்தன!
நீரற்ற ஆறுகள் தம்மையே தொலைத்துவிட்டன.
சுயநல சுருக்குப் பைகள் மணலை அழித்தன!
தன்னல மனங்கள் ஆக்கிரமித்து நகைத்தன!
விழுகின்ற மழையும் தங்க இடமின்றி
அழுதழுது அலைந்து திரிகிறது. !
இன்று விவசாயம் நிச்சயத் தோல்வியின்
நிதர்சன வெற்றி!

வரப்புயர நீருயரும் பொய்யாகிறதே!
இங்கே வரப்புகள் மட்டும் தானே உயர்கின்றன!

வளங்கள் அழிகையில்
தலைமுறை அழியும்
நிலங்கள் அழிகையில்
நிலவாழ்வு அழியும்
முகசாயம் அழிகையில் நாடகம் முடியும்!
விவசாயம் அழிகையில் தேசம் அழியும்!

நிலம் உலர்வது
மனிதம் உலர்வதின் அடையாளம்!
நிலம் செழிப்பது
மனிதம் செழிப்பதன் உத்தரவாதம்!

ஒன்றுபடுவோம்
உணர்வுகளால் ஒன்றுபடுவோம்!
விவசாயம் வாழ வேண்டும்!

விவசாயி ஆள வேண்டும்!
அப்போது தான் பூமி சிரிக்கும்
சோகம் மரிக்கும்

வி. பாக்கியலெட்சுமி
பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி
ஜெயங்கொண்டம்
ஒருங்கிணைப்பாளர் ஜெயந்தி கணேசன்
கைபேசி: 9159758211

## அன்பு

உலகத்தில் நமக்கென்று தாயாய் அவதரித்து
பாலும் சோறும் ஊட்டி பாசத்தோடு
நம்மை வளர்ப்பது
**பெற்றோரின் அன்பு**

செல்வம் வரும் போதும்
செல்வம் போகும் போதும் - நம்மிடம்
வித்தியாசமான உறவினை
வெளிப்படுத்துவது
**உறவினரின் அன்பு**

நம் இன்பதுன்பத்தை பரிமாறி
கை கோர்த்து விளையாடி பகிர்ந்து உண்டும்
ஒவ்வொரு பருவமும் மாறிப்போவது
**நண்பனின் அன்பு**

நம்மை இவ்வுலகத்தில் படைத்து

நமக்காக ஜீவனைக் கொடுத்து

என்றும் மாறாத நேசம் வைத்திருப்பது

**இறைவனின் அன்பு**

A.பிரியதர்ஷினி

B.Com.,
சென்னை-600112

**கவிதை**

கல்வி என்னும் மூன்றெழுத்து

உன் கனவை நனவாக்கிடும் முதலெழுத்து !

செல்வத்துள் சிறந்தது கல்வியன்றோ!

உன் வாழ்வை மாற்றிடும் செல்வமன்றோ!

நீ சேமிக்கும் சொத்துக்கள் அழிந்தாலும்

நீ சேமித்த கல்வியோ அழிந்துவிடா!

உலகம் உனக்கு எந்தப் புகழாரம் சூட்டினாலும்

உன் கல்விக்கு ஈடாகாது உணர்ந்திடு !

நீ பெற்ற கல்வியை உன் வாயால் காத்திடு

வானுலகமே உன்னை தூக்கிவிடும்!

நீ பெற்ற கல்வியை உன் மனதால் மதித்திடு

இந்த உலகமே உன்னை மதித்து விடும்!

உன் கல்விக்கு தகுந்தபடி வாழ்ந்து விடு
உன் பெயரெங்கும் மின்னி ஒளி வீசிடும்!
பெற்ற கல்வியை பயன்படுத்திவிடு
பிறர் முன்னேற நீ துணையாகிவிடு!
கல்வியை வியாபாரமாக்கி விடாதே!
உன்னையே நீ மறந்து விடாதே!

S. தீபிகா
IV-C
ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி

## அன்னை கவிதை

வார்த்தைகள் இல்லாமல்
பேசினேன்
கண்கள் இல்லாமல்
ரசித்தேன்
காற்றே இல்லாமல்
சுவாசித்தேன்
கவலைகள் இல்லாமல்
வாழ்ந்தேன்
என் தாயின் கருவறையில் மட்டும்

புவனம் கூட உனக்கு
இணையில்லை,
புவிக்கு நான் வர வரம்
தந்தவளே
பத்து திங்கள் பொத்தி வைத்து
வளர்த்தவளே
உன் கால் பாதம் பணிந்து
உன்னை வணங்குகிறேன்

S. நிவேதா
V-A
ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி

# மழை

உலகத்தை வாழ வைப்பாள்
ஊறுகளைப் போக்கிடுவாள்
தனதானியம் சேர்த்திடுவாள்
தரித்திரத்தை விரட்டிடுவாள்
எங்கள் வீட்டுத் தோட்டத்தை
எழில் சோலை ஆக்கிடுவாள்
மழை என்றும் தெய்வத்தாய்
கருணை கொண்டு பொழிந்திடுவாய்

K. மாளவிகா
V-B Std
ஸ்ரீ ஜே. ஆர். இ. டி. தொடக்கப்பள்ளி
199 பேப்பர் மீல்ஸ் ரோடு,
பெரவள்ளூர்,சென்னை -11

பொதிகை தொலைக்காட்சியில் நம் டிரஸ்ட் பற்றி திரு. ஜி. சுந்தர் அவர்களுடன் ஓர் நேர்காணல் எடுக்கப்பெற்றது.

நம் முகநூலில் இந்நிகழ்வு பதிவேற்றம் செய்யப்பட்டது.



*Our trust has been awarded for excelling in social work.*


*National Integrity Cultural's Academy 's "The Peaks' magazine honoured our Trust for its integrity and transparency in social work.*

*NICA – Chennai based organization- recognizes individuals and organizations every year for their contribution towards the upliftment of poor and needy.*

*We have been awarded, "Bharat Jyothi Excellence" category.*

*Our Founder Secretary, Mr.G.Sundar received the award on behalf of his team.*

*We dedicate this award to each and every person who sincerely put a lot of effort in achieving the excellence.*



நன்றி